**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 25-5-2016 Issued : 25-5-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**சனிக்கிழமை, ஜனவரி 23, 2016—தொகுதி 91—எண் 3**

**Saturday, the 23rd January 2016—Volume 91—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**23–1–2016**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்–விடைகள்—** | |
| | *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 507-552 |
| **2** | **தகவல் கோரல்—** | |
| | *உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்* | 552 |
| **3.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு பதிலுரை—** | 553-587 |
| | *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 560-586 |
| **4.** | **அரசினர் தீர்மானம்—** | |
| | பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 587-588 |
| **5.** | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 588-590 |


---

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மன்மத, தை 9, திருவள்ளுவர் ஆண்டு–2047

## 2016 ஜனவரி 23, சனிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்”*

*ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அச்செயலில் மிகப் பெரிய வெற்றி அடைவார்கள்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**31—**

### மின் கட்டண வசூல் மையம்

***56525**—**திரு. ம. குணசேகரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 ஜனவரி 23

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி மையப் பகுதியில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை நகரின் மையத்தில் இயங்கிவரும் மானாமதுரை ஊரகப் பிரிவில் இரண்டு மின் கட்டணம் செலுத்தும் மையங்கள் மூலமாகவும், மேலும், இந்த அலுவலகத்திலேயே மானாமதுரை நகர் பிரிவிற்காகக் கூடுதலாக ஒரு கணக்கீட்டாளரை நியமித்து, கட்டணம் செலுத்தும் இடத்தில் கவுன்டர் மூலமாகவும், மொத்தம் 3 கட்டணம் செலுத்தும் இடங்கள் மூலமாக மின் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனால் மின் கட்டணம் செலுத்துவதில் பொது மக்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படுவதில்லை. எனவே, மானாமதுரை பேரூராட்சி மையப் பகுதியில் மேலும் ஒரு மின் கட்டண வசூல் மையம் அமைக்கத் தற்பொழுது அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் பெரியார் கண்ட பொக்கிஷமே! அண்ணா கண்ட அற்புதமே! புரட்சித் தலைவர் கண்ட பூபாளமே! அயராது உழைக்கும் எங்கள் அன்னையே! தமிழகத்தைக் காக்கும் தமிழர் குல சாமியே! வெள்ளை மனம் கொண்ட வெண்மதியே! சூரியனைச் சுட்டெரிக்கும் சூறாவளியே! ஆழ்கடல் அன்பு கொண்ட தெய்வமே! அகிம்சையைக் காக்கும் அன்னையே! எங்கள் புரட்சித் தலைவியே! தமிழக முதல்வரே! அம்மா அவர்களே!, உங்களை வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை பேரூராட்சியின் மையப் பகுதியில், மின் கட்டண வசூல் மையம்*



2016 ஜனவரி 23]

*அமைக்கப்பட்டு, மானாமதுரை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்களும், ஊரகப் பகுதியில் வாழும் மக்களும் மின் கட்டணத்தை, மானாமதுரையின் மையப் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்புவரை செலுத்தி வந்தனர். இன்றைக்கு அந்த மையம் மாற்றப்பட்டு, மானாமதுரை பகுதியில், சிப்காட்டிற்கு அருகில் உள்ள மின்சார வாரியக் கட்டடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, பேரூராட்சிப் பகுதியில் வசிக்கின்ற மக்களும், ஊரகப் பகுதியில் வசிக்கின்ற மக்களும் மானாமதுரை பேருந்து நிலையத்திற்கு வந்து, அங்கிருந்து பேருந்தில் ஏறி 3 கிலோ மீட்டர் சென்றுதான் மின் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேரூராட்சிப் பகுதியிலே வசிக்கின்ற மக்களும், ஊரகப் பகுதியிலே வசிக்கின்ற மக்களும் மின் கட்டணம் கட்டுவதற்கு ஏதுவாக, மானாமதுரை பேரூராட்சி மையப் பகுதியிலேயே, பேரூராட்சிக்குட்பட்ட பகுதியிலேயே, அந்த வசூல் மையத்தை மீண்டும் அமைத்துத் தர வேண்டுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை நகர்ப் பகுதியிலே, நகர்ப் பகுதிக்கான மின் கட்டண வசூல் மையம் இயங்கி வருகிறது. அதே இடத்திலே ஊரகப் பகுதிகளுக்காகக் கூடுதலாக ஒரு மின் கட்டண வசூல் மையத்தை ஏற்படுத்தி, அதற்கென்று ஓர் அலுவலரையும் நியமித்து, அங்கேயும் மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே, ஊரகப் பகுதிக்கான மின் கட்டண வசூலும், நகர்ப் பகுதிக்கான மின் கட்டண வசூலும் ஒரே கட்டடத்தில், ஒரே இடத்தில் தனித் தனியாக இரண்டு கவுன்டர்கள் அமைக்கப்பட்டு, இரண்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஊரகப் பிரிவிற்கு அதிகபட்சமாக இரண்டு கவுன்டர்கள் இருக்க வேண்டும், நகர்ப் பிரிவிற்கு மூன்று கவுன்டர்கள் இருக்க வேண்டும். இதுதான் விதி. மானாமதுரையைப் பொறுத்தவரையில், ஊரகப் பகுதிக்கு இரண்டு கவுன்டர்கள் இருக்கின்றன. அதேபோல நகர்ப் பகுதிக்கும் போதுமான அளவு அதாவது 3 கவுன்டர்கள் இருக்கின்றன.*

[2016 ஜனவரி 23

*முற்பகல் 10–05*

இதில் ஒரே ஒரு பிரச்சினை என்னவென்று சொன்னால், இங்கே நகர்ப்புறத்தில் அந்த மையம் ஏற்கெனவே வாடகைக் கட்டடத்தில், தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது. அந்தக் கட்டடத்தை வேறு ஒருவர் கிரயம் வாங்கி விட்டதால், அந்தக் கட்டடத்தைக் காலி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனுடைய விளைவாக, அந்த மையத்திலிருந்த இரண்டு கவுன்டர்கள் பக்கத்தில், மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள துணை மின் நிலையம் இருக்கின்ற இடத்திற்கு மாற்றப்பட்டன. ஆகவே, மூன்று கிலோ மீட்டர் சென்று மின் கட்டணங்கள் செலுத்துவதற்கு மக்களுக்கு வசதிக் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, அங்கேயும் இயங்கி வருகிறது. நகரப் பகுதியில் இயங்கி வந்த இடத்திலேயே, ஊரகப் பகுதிக்குக் கூடுதலாக ஒரு கவுன்டர் அமைக்கப்பட்டு, இப்பொழுது இங்கேயும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதியைப் பொறுத்தவரையில், நகர்ப் பகுதியிலுள்ள கவுன்டரிலும் கட்டலாம், துணை மின் நிலையத்திலுள்ள கவுன்டரிலும் கட்டலாம். ஆகவே, போதுமான அளவிற்கு வசதிகள் இருப்பதால், கூடுதலாக ஒரு மின் கட்டண வசூல் மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இப்பொழுதெல்லாம் மின் கட்டணம் கட்டுவதற்குக் கூட்டமே இல்லை. ஏனென்று சொன்னால், மின் கட்டணம் செலுத்துகின்ற முறையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எளிமைப்படுத்தியிருக்கிறது. இன்றைக்கு மின் கட்டணத்தை தபால் நிலையம் மூலமாகவும் கட்டலாம். இ-சேவை மையங்கள் மூலமாகவும் கட்டலாம்; வங்கிகள் மூலமாகவும் கட்டலாம். அதேபோன்று, இணையம் மூலமாக, 19 வங்கிகளில் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியன் வங்கியைப் பொறுத்தவரையில், இந்தியன் வங்கி மூலமாக, பதியப் பெற்ற செல் நம்பர் மூலமாக, உங்களுடைய கைபேசி மூலமாகக்கூட பணம் கட்டலாம். நம்பரை பதிவு செய்து கொண்டால் அதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தியன் வங்கி மூலமாகவும் நீங்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதேபோல, இன்றைக்கு மக்கள் மின் கட்டணத்தைக் குறிப்பிட்ட நாளில்தான் செலுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. இப்பொழுதெல்லாம் 30 நாட்களிலும் எப்போது



2016 ஜனவரி 23]

வேண்டுமானாலும் கட்டலாம். பழைய மாதிரி கணக்கீடு முடிந்ததிலிருந்து, குறிப்பிட்ட 20 நாட்களுக்குள், அதாவது 14 ஆம் தேதிக்குள் கட்ட வேண்டும் என்பதெல்லாம் கிடையாது. இப்போது கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட தேதியிலிருந்து, உங்களுக்கு எவ்வளவு கட்டணம் என்று சொல்லப்பட்ட அந்தத் தேதியிலிருந்து 20 நாட்களுக்குள் நீங்கள் பணம் கட்டலாம். ஆகவே, அனைவரும், 30 நாட்களிலும் வெவ்வேறு நாட்களிலே மின் கட்டணம் செலுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக, மையங்களில் கூட்டமும் அதிகமாக இல்லை. ஆகவே, மக்களுக்கு இன்றைக்குப் போதுமான வசதிகள் செய்யப்பட்டிருப்பதாலும், ஊரகப் பகுதிக்கும், நகர்ப் பகுதிக்கும் மானாமதுரையிலே ஒரே இடத்தில் கட்டுவதற்கு வசதி இருப்பதாலும், கூடுதலாக தனியாக ஒரு மின் கட்டண மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன். மானாமதுரை பேரூராட்சிக்குப்பட்ட 11-வது, 12-வது, 13-வது, 14-வது மற்றும் 15-வது வார்டுகளில் உயர் அழுத்த மின்சாரக் கம்பிகள் வீடுகளுக்கு மேலே செல்கின்றன. அதன் காரணமாக விபத்துகள் ஏற்படுகின்ற சூழ்நிலை அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த உயர் அழுத்த மின்சாரக் கம்பிகளை வேறு இடத்திற்கு மாற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அதிலே உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதி, தேவதானம்பட்டி பகுதியில் ஓர் உப மின் நிலையம் அமைத்திட ஏற்கெனவே திட்டமிடப்பட்டு, பின்னர் 2011 ஆம் ஆண்டு, அது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள நிலக்கோட்டைப் பகுதிக்கு மாற்றப்பட்டது. அப்பொழுதே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அந்த எலுவனாம்பட்டி திட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னர், அங்கிருந்து பெரியகுளம், தேவதானம்பட்டி பகுதிக்கு மின் இணைப்புகள் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். ஆனால், அது முடிந்ததற்குப் பின்பும் அவ்வாறு கிடைக்காதபோது மீண்டும் அவரிடம் கோரிக்கை வைத்தேன். நிருவாக ஏற்பாட்டினால் சில மாதங்களில் உங்களுக்குக் கிடைக்கும் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார். இதுவரை மின்சாரம் அந்தப் பகுதிக்குக் கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுதாவது அதற்கான உத்தரவையோ அல்லது நடவடிக்கையோ மேற்கொள்ள வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலுவனாம்பட்டி, திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்திற்குள் வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் கூறும் தேவதானம்பட்டி, தேனி வட்டத்திற்குள் வருகின்றது. வெவ்வேறு மின் பகிர்மான வட்டங்களுக்குள்* (circles) *வருவதால், நிருவாக மற்றும் பல்வேறு நடைமுறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட, அந்த நிருவாக நடைமுறைகளையெல்லாம் கடந்து, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை மீண்டும் ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு மின்சார வாரியம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2016 ஜனவரி 23]

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

**திரு. ஆர். சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி நகர் மின் கட்டண வசூல் மையம், கொட்டாம்பட்டி நகரிலே இயங்கி வந்தது. அது தற்சமயம் அருகிலிருக்கிற துணை மின் நிலையக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால், கொட்டாம்பட்டியிலிருந்து 3 கிலோ மீட்டர் சென்று மின் கட்டணத்தைக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2001-2006 ஆம் ஆண்டு ஆட்சியின்போது, மாண்புமிகு அம்மா அவர்களால், 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 110 மெகா வாட் துணை மின் நிலையம் கொட்டாம்பட்டி அருகே 3 கிலோ மீட்டர் தூரத்திலே அமைத்துக் கொடுக்கப்பட்டது. இப்போது இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் அதைத் திறந்து வைத்து பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார்கள். இதுவரை கொட்டாம்பட்டியில் கட்டிக் கொண்டிருந்த மின் கட்டணத்தை, துணை மின் நிலையத்திலே கட்ட வேண்டுமென்று சொன்னதால் அங்கே செல்வதற்கு பொதுமக்கள் கொஞ்சம் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கொட்டாம்பட்டி நகரிலிருந்து அந்தத் துணை மின் நிலையம் இருக்கிற இடம் நன்றாகவே தெரியும். ஆகவே, உடனடியாக மின்சாரத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, மீண்டும் கொட்டாம்பட்டி நகர்ப் பகுதியிலேயே மின் கட்டணத்தை மக்கள் செலுத்துவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கட்டணம் கட்டுவதற்கு இடம் வேண்டுமென்று சொன்னால்கூட, நாங்கள் தனியாக அதற்கு ஓர் அறை ஒதுக்கிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் வசதிக்காக மின் கட்டணத்தை மட்டும் கொட்டாம்பட்டி நகரிலேயே வசூல் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2016 ஜனவரி 23

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான இடங்களில் துணை மின் நிலையங்களிலேயே அந்த மின் கட்டண வசூல் மையங்கள் இயங்கி வருகின்றன. அந்தத் துணை மின் நிலையத்திற்கும் அந்த ஊருக்கும் இடையே அதிகமான தூரமிருந்தால் மக்களுக்கு வசதிக் குறைவு ஏற்படும். அப்படிப்பட்ட இடங்களில் மட்டும் மின் கட்டண வசூல் மையத்தைத் தனியாகப் பிரித்து, ஒரு மையம் ஏற்படுத்தி வசூல் செய்யப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கொட்டாம்பட்டிக்கும், கொட்டாம்பட்டி துணை மின் நிலையத்திற்கும் 2 கிலோ மீட்டரிலிருந்து 3 கிலோ மீட்டர் வரை தூரமிருக்கும். எனக்கும் பக்கத்து ஊர்தான்; அதனால் தெரியும். 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தொலைவினால்கூட சில நேரங்களில் மக்களுக்கு வசதிக் குறைவு ஏற்படுவதுண்டு. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே ஒரு வசூல் மையம் ஏற்படுத்துவதற்கு இடம் தேர்வு செய்து கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்த இடம் குறித்து அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, கொட்டாம்பட்டியிலேயே அந்த வசூல் மையம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**32—**

### சாலையைச் சீரமைத்தல்

***48039—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உப-கோட்டம், பெருஞ்சிலம்பு-குமாரபுரம் சாலையைச் சீரமைக்கும் பணியை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2016 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை உப-கோட்டம், பெருஞ்சிலம்பு-குமாரபுரம் சாலை மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி சாலை கடந்த பெருமழையின் காரணமாக மிகவும் மோசமான நிலையில், குண்டும் குழியுமாக இருக்கின்றது. திருத்துறைப்பூண்டி-விளக்குடி வரை சாலை செப்பனிடுவதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல, திருத்துறைப்பூண்டி-மேலமருதூர் வரை அந்தச் சாலைப் பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. விளக்குடியிலிருந்து தட்டான்கோயில் வரையுள்ள மிகவும் பழுதடைந்திருக்கிற அந்தச் சாலையைச் சீர்செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில சாலைகளைச் சுட்டிக்காட்டி சீர் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நான்கரை ஆண்டு பொற்கால ஆட்சியில், 43,135.33 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. 2015–2016 ஆம் ஆண்டில் 8,273 கிலோ மீட்டர் நீள சாலைகளைச் சீரமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கடந்த டிசம்பர் மாதம் வரை 3,227.23 கிலோ*

[2016 ஜனவரி 23

*மீட்டர் நீளமுள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது, 4,865.77 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளைச் சீரமைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் அதிக அளவிலே சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிதி இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்றது. அந்த நிதியிலிருந்துதான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. 5 ஆண்டுக் காலம் நிறைவுபெறுகின்றபோது, அந்தச் சாலைப் பணிகள் பரவலாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தச் சாலைகளையும் ஆய்வு செய்து, சீரமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், கடலூர்-விருத்தாசலம் சாலையும், சிதம்பரம்-விருத்தாசலம் சாலையும் சில ஆண்டுகளாகவே போக்குவரத்துக்கு லாயக்கில்லாத நிலைமையிலே, மிக மோசமாக சீரழிந்திருக்கின்றன. சமீபத்திலே ஏற்பட்ட மழை, வெள்ளத்தினால் இன்னும் மோசமடைந்து போக்குவரத்தே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்தச் சாலைகளை போர்க்கால அடிப்படையிலே, போக்குவரத்துக்குப் பயன்படுத்துகிற வகையிலே சீர்செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், எந்த, எந்தச் சாலைகளெல்லாம் 5 ஆண்டுக் காலம் நிறைவு பெற்றிருக்கின்றன என்பது கணக்கிடப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,*



2016 ஜனவரி 23]

*அதிலே எது அதிகமாகச் சேதமடைந்திருக்கிறதோ, அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்த முன்னுரிமை அடிப்படையிலே சாலைப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. ஆகவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு 4 ஆண்டுக் காலத்திலே—திரும்பவும் நான் குறிப்பிட விரும்புகின்றேன்—இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பிரித்து, எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கும் பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு பல்வேறு சாலைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றார்கள். அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, நிதிநிலைமைக்கேற்ப சீர் செய்ய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட அதிராம்பட்டினம் பேரூராட்சியிலிருந்து மாளியக்காடு கிராமத்திற்குச் செல்லக்கூடிய வகையிலே, இணைப்புச் சாலை இருக்கின்றது. அது கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. அது உள்ளாட்சி அமைப்பின்கீழ் அமைந்து, நிதிப் பற்றாக்குறையின் காரணமாகப் பராமரிப்பின்றி இருக்கிறது. எனவே, முன்பு இருந்த முறையின்படி, நெடுஞ்சாலைத் துறையின்கீழ் அதைக் கொண்டுவந்து மேம்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியது ஊராட்சிச் சாலைகள், கிராமப்புறச் சாலைகள். ஏற்கெனவே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அதை மாற்றம் செய்துவிட்டார்கள். கிராமச் சாலைகளெல்லாம்*

[2016 ஜனவரி 23

உள்ளாட்சி அமைப்பின்கீழ் கொண்டு செல்லப்பட்ட காரணத்தினாலே, நெடுஞ்சாலைத் துறையிலிருந்து உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்ட காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தச் சாலை உள்ளாட்சித் துறைக்கு மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இதை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டார்கள். அதை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற வேண்டும் என்று சொன்னால், அதற்கான வழிமுறைகளைப் பின்பற்றிதான் மாற்ற வேண்டியிருக்கிறது. உள்ளாட்சியில் இருக்கின்ற ஒன்றியக் குழுவின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு, பின்னால்தான் அதை நெடுஞ்சாலைத் துறைக்கு எடுத்துக்கொள்ள முடியும். இந்த விதிகளையெல்லாம் பின்பற்றினால்தான் நெடுஞ்சாலைத் துறைக்கு அந்தச் சாலைகளைக் கொண்டுவர முடியும். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தச் சாலையை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பரிந்துரையின்பேரிலே அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

**திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட LC-4-ல் மேம்பாலப் பணி இரண்டாண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்டது. அதிலே தனியார் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றுள்ளார்கள். அந்தத் தடையாணை பெற்றவர்களோடு, மாவட்ட ஆட்சித் தலைவர், D.R.O., R.D.O., சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானும் உட்கார்ந்து பேசி, அவர்கள் கேட்ட தொகையைக் கொடுப்பதற்கு மாவட்ட நிருவாகம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மாவட்ட நிருவாகத்தால் நெடுஞ்சாலைத் துறைக்குப் பரிந்துரை வந்திருக்கிறதா? அந்தப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



2016 ஜனவரி 23]

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த இரயில்வே மேம்பாலப் பணியில் நிலம் எடுக்கின்ற பிரச்சினையால் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில உரிமையாளர்களிடத்தில் பேசி, அவர்களைச் சமாதானப்படுத்தி, தேவையான இழப்பீட்டுத் தொகைகளைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாவட்ட நிருவாகமும், அரசும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**33—**

### மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சி

***53328—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சியளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்*

[2016 ஜனவரி 23

பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக சிவகாசியில் ஒரு பயிற்சி மையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க சிவகாசியில் பயிற்சி மையம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கு அதாவது ஃபோர்மேன்களுக்கு பயிற்சி மையம்மூலம் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படுகின்ற சிவகாசி அமைந்துள்ள விருதுநகர் மாவட்டம், பட்டாசுத் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்; பட்டாசுத் தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர். இந்தத் தொழிலை நம்பி பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைப் பாதுகாப்பாக மேற்கொள்ள நினைத்தாலும்கூட, எதிர்பாராத விபத்துகள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் பட்டாசுத் தொழிற்சாலைகளில் நியமிக்கப்படும் ஃபோர்மேன்களுக்குப் போதிய பயிற்சி இல்லாததும், ஒன்றுக்குமேற்பட்ட ஃபோர்மென் இல்லாததுமே ஆகும். எனவே, இரசாயன மருந்துக் கலவைகளைக் கலப்பதற்கு நன்கு தெரிந்தவர்களை ஃபோர்மேன்களாக நியமிக்க வேண்டும், அதற்கான கல்வித் தகுதியையும் நிர்ணயிக்க வேண்டும். குறிப்பாக, ஃபேன்சி ரக பட்டாசுத் தயாரிப்பதற்குத் தேவையான மணி மருந்துகளைக் கையாளும்போது, எச்சரிக்கையுடன் செயல்பட பல்வேறு வழிகாட்டுதல் இருந்தாலும்கூட, அதைப் பின்பற்றுவதில் தொடர்ந்து கவனக் குறைவு இருந்து வருகிறது. பட்டாசுத் தொழிலில் அதிக விபத்துகள் ஏற்படவும், அதிகளவு உயிரிழப்பு ஏற்படவும் இதுதான் காரணமாக அமைகின்றது. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்ற ஃபோர்மேன்களை நியமிக்கும்போது, போதிய பயிற்சியும், அவர்களுக்கு அந்தப் பயிற்சிக் காலங்களில் ஊக்கத் தொகை போன்றவற்றையும் ஏற்படுத்தித் தந்து, பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2016 ஜனவரி 23]

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்களுக்கு ஒரு மாத கால மருந்து கையாளும் பயிற்சி இப்பயிற்சி மையத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் மற்ற தொழிலாளர்களுக்கும் இப்பயிற்சி மையத்தில் பொதுவான பாதுகாப்பு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சான்றிதழ் பெற்ற ஃபோர்மேன்கள் மட்டுமே வெடிபொருள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறையால் அங்கீகரிக்கப்பட்டு, மேற்படித் துறையின் மூலமாக ஃபோர்மேன்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு பல்வேறு வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பட்டாசுத் தொழிற்சாலைகளில் பொதுவாகக் காணப்படும் பாதுகாப்பற்ற சூழ்நிலை மற்றும் அதன் தடுப்பு முறைகள் பற்றிய பயிற்சிகள், பட்டாசுத் தொழிற்சாலைகளில் காணப்படும் பாதுகாப்பற்ற செயல்கள் மற்றும் அதன் தடுப்பு முறைகள் பற்றிய பயிற்சிகள், வேதிப் பொருட்களின் தன்மை, மருந்துக் கலவைத் தயாரிப்பதில் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், காய வைத்தல், சேமித்தல் போன்ற பயிற்சிகள், தொழிற்சாலை அமைப்பு, கட்டடப் பராமரிப்பு, இடி, மின்னல் அபாயம் மற்றும் பாதுகாப்பு நுணுக்கங்கள் போன்ற பயிற்சிகள், முதலுதவி, தொழில்வழி நோய்கள், சுய பாதுகாப்புச் சாதனங்கள் மற்றும் சுகாதாரம் போன்ற பயிற்சிகள், தீ தடுப்பு மற்றும் வெடி மருந்து தடுப்பு முன்னேற்பாடுகளும், ஆபத்து கால நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன். (குறுக்கீடு) திரு. வெ. பொன்னுப்பாண்டி, சொல்லுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்டாசுத் தொழிலுக்கு மிகப் பெரிய பாதிப்பு உருவாகியிருக்கின்றது. காரணம், சீனப் பட்டாசுகளின்

*ஆதிக்கம். சீனப் பட்டாசுகள் விற்பவர்களை பல்வேறு வகைகளில் அரசு கண்காணித்தாலும், அதையும் மீறி சம்பவங்கள் நடைபெற்றது உண்டு. சீனப் பட்டாசுகளின் ஆதிக்கம் இன்றளவும் உள்ளதற்கு உதாரணம் என்னவென்றால், முன்பு தீபாவளித் திருநாள் முடிந்த பின்பு, பட்டாசு ஆலைகள் திறக்கின்றபோது பட்டாசுத் தொழிலாளர்களுக்கு முன்பணம் வழங்குவார்கள். ஆனால், இந்த ஆண்டு முன்பணம் என்பது தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல், தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாவட்டத்திலுள்ள 650-க்கும் மேற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலைகள் இன்றைக்கு பல்வேறு நிலைகளில் நெருக்கடியைச் சந்தித்து இருக்கின்றன. எனவே, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும், விபத்து இல்லாத பட்டாசுத் தொழில் நடைபெறவும், சீனப் பட்டாசுகளைத் தடை செய்வதோடு, நம் நாட்டில் பட்டாசுத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் உயிரிழப்பைத் தடுக்கவும் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துவதோடு, விருதுநகர் மாவட்ட பட்டாசுத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதிலே தனிக் கவனம் எடுத்திருக்கிறது என்பதை நான் பதிய வைக்க விரும்புகிறேன். சீனப் பட்டாசுகளுக்கு, நடைமுறைகளுக்கு, அங்கே இருக்கக்கூடிய பெரிய வியாபாரிகளும் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இது மத்திய அரசாங்கத்தினுடைய பணி என்றாலும்கூட, மாநில அரசாங்கம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், இதில் தீவிர கவனம் செலுத்தி, நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*மேலும், அந்தப் பகுதிகளிலிருக்கக்கூடிய தொழிலாளர்களையெல்லாம் பாதுகாத்திட வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல வேண்டுகோள் என்றாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அதற்கு முன்னாலேயே பாதுகாப்புப் பயிற்சி என்கின்ற வகையில் 2,260 பாதுகாப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டு, 1,03,039 தொழிலாளர்கள் அந்தப் பயிற்சிகள் மூலமாகப் பலன் பெற்றிருக்கின்றனர். அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த இடர்பாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவியேற்றதற்குப் பின்னர், 495 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, 24,829 தொழிலாளர்கள் பலன் பெற்றிருக்கின்றனர்.*





*அதைப்போன்று, சீனப் பட்டாசுகள் வருவதைத் தடுக்கின்ற வகையில் நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலமாகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*அதுமட்டுமல்ல; மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான், எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில், தொழிலாளர்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறது. அதைப்போன்று, விபத்துகள் குறைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். சென்ற காலங்களில் 5,155 விபத்துகள் தமிழகம் முழுவதும் நடைபெற்றன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின், கனிவான பார்வையை துறையின் மூலமாகச் செலுத்தி பல்வேறு நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால், 2,063 ஆக அந்த விபத்துகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**34—**

## சொந்தக் கட்டடம்

***59773—திரு. என். முருகுமாறன்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2016 ஜனவரி 23

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருவதால், புதிய கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'என் இல்லமும், உள்ளமும் தமிழகம்தான்' என உலகுக்கு உரக்கச் சொல்லி, 'தன் நலன் கருதாமல், தமிழர் நலன் ஒன்றுதான் தன் நலன்' என தியாக வாழ்க்கை வாழ்ந்து, பொற்கால ஆட்சி நடத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனத் தலைவி, பொன்னியின் செல்வி, மாட்சிமை நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

*முற்பகல் 10–30*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி நின்ற' வள்ளல் பெருமான் மறைந்தும் மறையாமல் நிலைத்து நிற்கிற கடலூர் மாவட்டம், வடகிழக்குப் பருவமழையின் காரணமாகப் பெரும் சேதமடைந்தது என்ற செய்தி வெளியான உடனேயே, போர்க்கால அடிப்படையில், தீபாவளிப் பண்டிகை என்று கூடப் பார்க்காமல், "பொங்கும் தமிழர்க்கின்னல் விளைத்தால், சங்காரம் நிஜமெனச் சங்கே முழங்கு" என பாவேந்தன் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கணமாக, தமிழகத்தினுடைய மூத்த அமைச்சர் பெருமக்களாகிய மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும்,*



2016 ஜனவரி 23]

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் உடன் கடலூர் மாவட்டத்திற்கு அனுப்பி, வடகிழக்குப் பருவமழையினுடைய ஈரம் காய்வதற்குள்ளாகவே கடலூர் மாவட்ட மக்களின் வாட்டத்தைப் போக்கிய (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் காவல் தெய்வம், காவியத் தலைவி, உலகத் தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களுக்கு, கடலூர் மாவட்ட மக்களின் சார்பிலும், என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், உலக வங்கி நிதியுதவி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் பல்வேறு பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது நடைபெறுகிற சீர்மிகு ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு, போதுமான இடம் அங்கே இருக்கின்ற காரணத்தினால், அரசு முன்வருமா; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 434 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகங்கள் உள்ளன. அதில் 230 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 204 அலுவலகங்கள் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

[2016 ஜனவரி 23

குறிப்பிட்டதைப்போல, 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக, உலக வங்கி உதவியுடன், மத்திய அரசின் உதவியுடன், அந்த நேரத்தில் கடலூர் மாவட்டத்தில் 14 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வந்ததில், கடலூர், அண்ணாகிராமம், பரங்கிப்பேட்டை, கம்மாபுரம், விருத்தாசலம் ஆகிய 5 திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு one time grant ஆகப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டி முடித்தாகிவிட்டது. ஆனால், அதற்குப் பிறகு இதுபோன்ற சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு எந்த நிதி ஒதுக்கீட்டையும் செய்யாமல், அதற்குப் பதிலாக வாடகையாக 3,490/- ரூபாய் என்று நிர்ணயம் செய்து, அதை மட்டுமே வழங்கிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான், அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டுமென்று விரும்புவாரேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதி என்று ஒரு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியின்மூலம் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பரிந்துரையுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவருடைய விருப்புரிமை நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2016 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அளித்த பதிலிலேயே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியைப் பெற்று, கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதை, மீண்டும் ஒரு முறை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

**மகளிர் கல்லூரி**

***50241—திரு. ப. சிவக்கொழுந்து:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதியில் மகளிர் கல்லூரி மற்றும் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில், கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஒன்றும், விடுதி ஒன்றும் துவக்குவது பற்றிய கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.

[2016 ஜனவரி 23

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற பவானி தொகுதியில், அரசுக் கல்லூரி ஒன்றுகூட கிடையாது. பவானிக்கு பக்கத்தில் அரசுக்குச் சொந்தமான விதைப் பண்ணை சுமார் 65 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. விவசாயக் கல்லூரி அமைக்க மிகப் பொருத்தமான இடம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பவானி தொகுதியில் விவசாயக் கல்லூரி அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சிகள் எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியில் விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு நிலம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டிருக்க வேண்டிய கேள்வி. இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கடந்த நான்காண்டுகளில், விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் படிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 3 கல்லூரிகளைத் துவங்கியது. மேலும், பெண்களுக்கென்று ஒரு தோட்டக் கலைக் கல்லூரியைத் தொடங்கிய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.



2016 ஜனவரி 23]

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியாக இருந்தாலும், தானே புயலாக இருந்தாலும், சமீபத்தில் பெய்த பெருமழை, வெள்ளம் என மக்களை அச்சுறுத்திய இயற்கைச் சீற்றங்களெல்லாம் அஞ்சி ஓடுகின்ற வகையில், அதன் வேகத்தைவிட இருமடங்கு அதிகமாக வேகம் கொண்டு, மக்களைக் காக்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, செக்கானூரணி, எ. கொக்குளத்தில், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று திறந்து வைக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கே மாணவர்களுக்கென தனி விடுதி இருக்கிறது; மாணவிகளுக்கு விடுதி இல்லை.

அதேபோல், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி திருமங்கலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டு, 900 மாணவ, மாணவியர் படித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கென தனித் தனியாக மாணவ, மாணவியர் விடுதிகளை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எ. கொக்குளம் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிக்கென மாணவியர் விடுதியும், திருமங்கலம், காமராஜர் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியில் மாணவ, மாணவியர் விடுதியும் உருவாக்கித் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, திருமங்கலத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். அங்கே விடுதி ஒன்று வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேலும், செக்கானூரணியில்கூட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டு, தற்போது அங்கே கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே விடுதி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## புதிய திருத்தேர்

***33856—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின்கீழ், தினசரி ஒரு கால பூஜை நடைபெற்றுவரும் சிறிய கோயிலாகும். இதன் ஆண்டு வருமானம் ரூ.54,000/- மட்டுமே. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பழைய திருத்தேர் ஏதும் தற்போது இல்லை. மேலும், தேரோடும் வகையில் அகன்ற வீதிகளும் இல்லை. இருப்பினும், எதிர்காலத்தில் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, தேரோடும் வாய்ப்புகளை உருவாக்கித் தரும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

## பேருந்து வசதி

***52006—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடிப் பேருந்து வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடியாகப் பேருந்து போகின்ற அளவுக்குப் போதுமான பயணிகள் இல்லாத காரணத்தினால், இது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகள் வரை, சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடியாகப் பேருந்து இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால், இப்போது பேருந்துகள் போதுமான அளவுக்கு இல்லை என்ற காரணத்தினால் அந்தப் பேருந்தை நிறுத்திவிட்டார்கள். எனவே, ஏற்கெனவே இயங்கி, இடையிலே நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்தை உடனடியாக இயக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கிய பேருந்தில் தினந்தோறும் 10–லிருந்து 12 பேர் மட்டும்தான் பயணம் செய்தார்கள். கடலூரிலிருந்து, சேத்தியாதோப்பு மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்து காஞ்சிபுரத்திற்கு அதிக பஸ்கள் இருக்கின்ற காரணத்தினால் நேரடியாகப் பேருந்தை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிதம்பரத்திலிருந்து இயக்கப்படுகிற பேருந்துகளில் சில நிறுத்தப்பட்டிருக்கின்றன. சில பேருந்துகளின் நடைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, கடலூர்–பிச்சாவரம் பேருந்து முழுமையாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. சிதம்பரம்–டி.எஸ். பேட்டை, சிதம்பரம்–நெடுஞ்சேரி, சிதம்பரம்–புதுச்சத்திரம் ஆகிய நகரப் பேருந்துகள் எல்லாம் ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று நடைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகளைக் கேட்கின்றபோது, போதுமான அளவிற்கு*



2016 ஜனவரி 23]

*பேருந்துகள் இல்லாத காரணத்தினால், நாங்கள் மாற்றி மாற்றி இயக்கி சமாளிக்க வேண்டியிருக்கிறது, அதனால் சில நடைகளைக் குறைக்க வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிதம்பரம் பகுதிக்குக் கூடுதலான பேருந்துகளை ஒதுக்கி, இந்தப் பேருந்துகளின் நடைகளைக் குறைக்காமல், தொடர்ந்து இயக்குவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகின்றார்கள். கடந்த கால தி.மு.க. ஆட்சியைவிட இப்போது 1,480 புதிய வழித்தடங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 6,500 வழி நீட்டிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. யாரோ அதிகாரிகள் சொன்னார்கள் என்று சொல்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது குறிப்பிட்டு, ஏற்கெனவே இயங்கிய பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை கவனத்திற்கு எடுத்து வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதனை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், மஞ்சுகாண்டப்பள்ளி, தொட்டமஞ்சி, உளிபெண்டா, கெம்பஹரி போன்ற மலைக் கிராமங்களுக்குச் சாலை வசதி இருந்தும் பேருந்துகள் இயக்கப்படவில்லை. நகரப் பேருந்துகளையோ அல்லது புறநகர்ப் பேருந்துகளையோ மலைப் பாதையில் இயக்குவதற்குச் சிரமமாக இருப்பதால், மலைக் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் சிற்றுந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

[2016 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 533 மலைப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிகளில் பயணிகளுடைய அடர்வு இருக்குமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

**திருமதி செல்வி ராமஜெயம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். சிதம்பரம்–சேத்தியாதோப்பு வழியாக கண்ணங்குடி, குச்சிப்பாளையம், புளியங்குடி, சாக்காங்குடி வழி பேருந்து வசதி இல்லாத காரணத்தினால், அந்த வழியாக நகரப் பேருந்து இயக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதிகளுக்கு நகரப் பேருந்து வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். நகரப் பேருந்து போகின்ற அளவிற்கு வசதி இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*



2016 ஜனவரி 23]

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதியில் பேருந்தே இயக்காத சில கிராமங்களுக்குப் பேருந்தை இயக்க வேண்டும் என்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தேன். அரூர், கிளாப்பாறை, ஈட்டியம்பட்டி, தீர்த்தமலை வழியாக எந்தப் பேருந்தும் இயக்கப்படவில்லை. இன்றைக்கும், 10 ஆண்டுக் காலமாக மக்களின் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாததால், மக்கள் பெரும் அதிருப்தியில் இருக்கின்றார்கள். அதேபோல, தருமபுரியிலிருந்து செம்மணஹள்ளி, கதிர்நாயக்கஹள்ளி வழியாக கம்பைநல்லூர் செல்லக்கூடிய ஒரே பேருந்து 36 வருடங்களாக ஓடிக் கொண்டிருக்கின்றது. மாற்றுப் பேருந்து என்பதே இல்லை. ஒரு பேருந்து சென்று மீண்டும் திரும்பி வரும்வரை வேறு பேருந்து வசதியில்லாமல் மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். இதுகுறித்து நான் ஏற்கெனவே இந்த அவையில் கோரிக்கையை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தருமபுரி மாவட்டத்திற்கு 20 புதிய பேருந்துகளை விட்டார்கள். அத்தனையும் புறநகர்ப் பேருந்துகளாக விடப்பட்டன. நகரப் பேருந்தாக விடாததனால் அதிகாரிகள் அதைப் புறக்கணித்திருக்கிறார்கள். ஆகவே, புறநகர்ப் பேருந்தை நகரப் பேருந்தாக மாற்றி, பேருந்து செல்லாத பகுதிகளுக்குப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் கிட்டத்தட்ட 1,480 புதிய வழித்தடங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னேன். ஆயிரம் மக்கள் தொகை உள்ள பகுதிகளுக்கு நிச்சயமாகப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதற்குக் குறைவாக மக்கள் தொகை இருக்கின்ற பகுதிகளுக்கு ஏற்கெனவே செல்கின்ற பேருந்துகளை நீட்டிப்பு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகாறும் பேருந்தே இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கு நகரப் பேருந்து வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார்கள்.*

ஏற்கெனவே அந்தப் பகுதியிலே பேருந்துகள் இல்லை என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அப்படி இருக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**38—**

## குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

***64720—திரு. ஆர். மனோகரன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலுள்ள வார்டு எண்கள் 61 முதல் 65 வரையிலான பகுதிகளுக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட வார்டு எண்கள் 61 முதல் 65 வரையிலான பகுதிகளில் சீரான குடிநீர் வழங்கும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை 63 கோடியே 70 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

**திரு. ஆர். மனோகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லோர் நெஞ்சங்கள் நாளும் நினைத்திட, ஏழைகளின் இதயங்கள் எப்பொழுதும் குளிர்ந்திட, எந்நாளும் மக்கள் நலத் திட்டங்களைத் தந்திடும் எங்கள் மாதரசி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி ஊராட்சி, எல்லக்குடி ஊராட்சி, கீழகல்கண்டார்கோட்டை ஊராட்சி மற்றும் ஆலத்தூர் ஊராட்சி ஆகிய பகுதிகள் அடங்கிய வார்டு எண்கள் 61 முதல் 65 வரையிலான 5 வார்டு பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஏற்கெனவே உள்ள 60 வார்டுகளுக்கு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 110 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. அப்பகுதியில் வாழும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 128 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும்வகையில், 221 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களால் 12–2–2014 அன்று துவக்கி வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி*

மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி ஊராட்சி, எல்லக்குடி ஊராட்சி, கீழகல்கண்டார்கோட்டை ஊராட்சி மற்றும் ஆலத்தூர் ஊராட்சி ஆகிய பகுதிகள் அடங்கிய 5 வார்டுகளில் வாழும் சுமார் 70 ஆயிரம் மக்களுக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் முதல் 58 லிட்டர் வரை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. புதிதாக இணைக்கப்பட்ட வார்டு எண்கள் 61 முதல் 65 வரையில் வாழும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க 63 கோடியே 70 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசாணை எண் 125, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12–8–2015–ல் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்போது கூராய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பிப்ரவரி மாத இறுதிக்குள் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்ட அந்த 5 வார்டுகளுக்கும் புதிய குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, இன்றைக்கு அதற்கான நிதியையும் ஒதுக்கி, திட்டத்தை விரைந்து செயல்படுத்த உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.





**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, 46–வது வட்டம், பி. கல்யாணபுரம், பிரதான தெருவில் தற்போதுள்ள குடிநீர்க் குழாய்கள் பழுதடைந்திருப்பதால், குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. அதைத் தாண்டியிருக்கிற குழாய்களிலே சாக்கடை நீரும் கலந்து வருவதால், பிரதான சாலையைத் தாண்டி மக்கள் குடங்களோடு சென்று தண்ணீர் எடுக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. மாதக் கணக்கில் இது குறித்துப் புகார் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்தக் குழாய்களை உடனே அகற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு குழாய்களிலே தண்ணீர் கிடைப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதுபோல், 35–வது வட்டத்தில் நிலத்தடி நீர்த் தொட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொட்டிகளை இப்போது பயன்படுத்துவதில்லை. ஏனென்றால் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நேரடியாக நீரை பம்ப் செய்கிறார்கள். அந்த நிலத்தடி நீர்த் தொட்டிகளை நாம் இப்போது பயன்படுத்தி, சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வரும் தண்ணீரை அங்கேயே தேக்கி, அங்கிருந்து மீண்டும் நீரை ஏற்றினால், பம்ப் செய்தால் force ஆக தண்ணீர் குடியிருப்புகளுக்குக் கிடைக்கும். ஏனென்றால், இப்போது ஆயிரக்கணக்கான புதிய வீடுகள் வந்துவிட்டன. முதல் மாடி, இரண்டாம் மாடி என்றெல்லாம் வந்துவிட்டன. ஆகவே, அப்படிச் செய்தால் மக்களுக்கு அது சிறப்பான ஏற்பாடாக அமையும் என்று நான் கருதுகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மெட்ரோ வாட்டர் சப்ளை பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே குடிநீர்ப் பணிகள், குழாய்கள் விஸ்தரிப்பு, பழுதுபார்ப்புப் பணிகளுக்காக சிறப்பான முறையிலே, எந்த

[2016 ஜனவரி 23

முதலமைச்சரும் செய்யாத அளவிற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கியுள்ளார்கள். கிட்டத்தட்ட ரூ.21,298.15 கோடி அளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியுள்ளார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே மொத்தமாக 5 வருடங்களில் ரூ.7,250 கோடி அளவிற்குத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெட்ரோ வாட்டர் சப்ளை செய்யப்படுகின்ற அந்த வார்டுகளிலே தண்ணீர்க் குழாய்கள் பழுது நீக்கும் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, சரி செய்யப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இணையதளம் மூலமாக, எங்கிருந்து புகார் வந்தாலும் அதனை உடனடியாகச் சரிபார்க்கும் திட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்து வைத்துள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வார்டுகளில் குடிநீர் விநியோகம் சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்படி 72 வார்டுகளில் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால், புதிதாக இணைக்கப்பட்ட 28 வார்டுகளில் குடிநீர், லாரிமூலம் சப்ளை செய்யப்படுகிறது. எனவே, அந்த 28 வார்டுகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தண்ணீர் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் உள்ள சில பகுதிகளில் லாரிகள்மூலம் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு



2016 ஜனவரி 23]

வந்தது. அதைச் சரி செய்வதற்காக, அந்தப் பகுதிகளைக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, அது சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

## கால்நடை பெரு மருத்துவமனை

***51168—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மைலாடி பேரூராட்சி, மைலாடியில் கால்நடை பெருமருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மைலாடி பேரூராட்சியில் மைலாடியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த கால்நடைக் கிளை நிலையம் கடந்த 30-12-2014 அன்று முதல் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தக் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தமாக புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நேரத்திலே ஒரு தகவலை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

[2016 ஜனவரி 23

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*கடந்த 5 ஆண்டுகாலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஏறக்குறைய 1,615 கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டுவதற்கு ரூ.422 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 1,265 கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கரங்களினாலே அனைத்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது 350 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

## கூட்டுறவு நூற்பாலை

*__64042—திரு. சு. ரவி:__

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிடர் மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி, வெற்றி, வெற்றி! இனி அம்மா அவர்களுக்கு எல்லாமே வெற்றிதான் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*



2016 ஜனவரி 23]

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா என்ற வினாவிற்கு, அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட அரசியலைத் தன்னைச் சுற்றியே சுழல வைக்கும் உலகத் தமிழினத்தின் ஒரே விலாசம்; கருத்தரிப்பவர் 10 குழந்தைகளுக்குத் தாயாக முடியும். ஆனால், கருணை தரிப்பவரே பத்து கோடி தமிழர்களுக்கும் தாயாக முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் புவிக்குப் புரியவைத்த புரட்சித் தாய் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். இமயத்தைப் பணிய வைக்கும் துணிவும், இல்லார்க்கு வாழ்வளிக்கும் கனிவும், தொண்டர்களை வாழவைக்கும் வீரமும், துரோகிகளை வீழ்த்துகின்ற வீரமும், நெருப்பாற்றில் நீந்துகின்ற தீரமும், நினைத்ததை முடிக்கின்ற நெஞ்சின் உரமும் ஒருசேரப் பெற்று, உலகமே கூர்ந்து கவனிக்கிற தலைவியாக உலகத் தமிழர்கள் மட்டுமல்ல; உலகத் தலைவர்களே உன்னிப்பாகப் பார்க்கிற உன்னதத் தலைவி. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாமை, போதாமை நீக்கப்பட்டு, வலியோர், எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு, எல்லோர்க்கும் ஏற்றம், இன்பம், உறுதி என்ற நிலைபாட்டுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வருவாயைப் பெருக்கி, பொருளாதாரத்தை வளப்படுத்திட பல்வேறு திட்டங்களை வழங்கி வருபவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

*‘என் சமூகம் தூங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்’ என்று சொன்னார் அண்ணல் அம்பேத்கர். அதேபோன்று, இந்தச் சமூகம் கல்வியறிவு பெற வேண்டுமென தூங்காமல் விழித்து, உழைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே தலைவி, நம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

[2016 ஜனவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்தைச் சுற்றியுள்ள குருராஜப்பேட்டை, வளர்புரம், நாகவேடு, சம்பத்ராயன்பேட்டை, நெமிலி, பணப்பாக்கம், மேல்களத்தூர், மின்னல் போன்ற பல்வேறு கிராமங்களிலே வாழும் பெரும்பாலான மக்களெல்லாம் கைத்தறி மற்றும் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு நெசவு நெய்வதற்கு நூல்கள் அதிகமாகத் தேவைப்படுவதால், வெளி மாவட்டங்களிலிருந்தும், வெகு தொலைவிலிருந்தும் நூலை இறக்குமதி செய்து, துணிகளை அதிகளவில் ஏற்றுமதி செய்கிறார்கள்.

அரக்கோணம் தொகுதி, ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் தொகுதியாகும். ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களெல்லாம் குறைந்த ஊதியத்திற்குத் தனியார் நிறுவனங்களை நாடி, தொலை தூரம் செல்கிறார்கள். எங்கள் தொகுதியிலே நெசவுத் தொழிலை அதிகமாகச் செய்வதால், ஆதி திராவிடருக்கென பிரத்தியேகமாக ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, கேள்வியைக் கொஞ்சம் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சு. ரவி:** அவர்களுக்கு வேலைவாய்ப்பும், அதேநேரத்தில், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து தடையில்லாமல் தரமான நூலை குறைந்த செலவிலே வழங்கிட ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கென பிரத்தியேகமாக ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கென்றே பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் வகுப்பினருக்காகவே பிரத்தியேகமாக மாண்புமிகு இதய தெய்வம்



2016 ஜனவரி 23]

புரட்சித் தலைவர் காலத்தில் 1985 ஆம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டம், கமுதி தாலுகா, அச்சன்குளம் கிராமத்தில், 12,320 நூற்புக் கதிர்களுடன், 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையினை மூடிய பெருமை கடந்த ஆட்சியாளர்களுக்கு உண்டு. அது கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மூடப்பட்டது.

ஆதி திராவிட சமுதாய மக்கள் மற்றும் பின்தங்கியோர் நலனில் எப்போதும் அக்கறையும், கருணையும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11–3–2012 ஆம் தேதியன்று நடத்திய ஆய்வின்போது, இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தி, மீண்டும் திறந்து, இயக்குவதற்காக உத்தரவிட்டார்கள்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** 29-11-2012-ல் சிறப்பு நிதியொதுக்கீடாக ரூபாய் 18 கோடியே 43 இலட்சம், 11-12-2014-ல் ரூபாய் 9 கோடியே 59 இலட்சம் என மொத்தம் ரூபாய் 28 கோடியே 2 இலட்சம் வழங்கப்பட்டு, இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலை நவீனப்படுத்தப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே 200 ஆதி திராவிடர்கள் மீண்டும் வேலைவாய்ப்பினைப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எதிர்வரும் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்ற பின்னர், அதற்குரிய ஆயத்த நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 23

**41—**

**விளையாட்டரங்கம்**

**47710*—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

*மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலில் சரித்திர சாதனை; பாராளுமன்றத் தேர்தலில் சரித்திர சாதனை புரிந்ததோடு வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று கின்னஸ் சாதனையைப் புரியவிருக்கின்ற தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எனது தொகுதியில், 217 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளும், 64 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவற்றில் சுமார் ஒன்றரை இலட்சம் மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்கள் வருடந்தோறும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று வருகின்றனர். இந்த ஆண்டுகூட, ஒரு மாணவன் மற்றும் இரண்டு மாணவிகள் தேசிய அளவில் வெற்றி பெற்று, வருகின்ற ஜுன் மாதம் 30 ஆம் தேதி தேசிய அளவிலான*



2016 ஜனவரி 23]

*போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், வள்ளியூரில் ஒரு விளையாட்டரங்கம் அமைத்துத் தந்தால், ராதாபுரம் தொகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மக்களே தன் மக்கள், தமிழர் நலனே தன் நலன்" என்று உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக விளங்குகின்ற அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் விளையாட்டு வளாகமும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம், கல்லிடைக்குறிச்சி, மேலப்பாளையம், சங்கரன்கோவில் ஆகிய பகுதிகளில் பல்வேறு உள் விளையாட்டு அரங்கங்களும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சரித்திர சாதனை படைக்கப்பட்டு வருகிறது.*

*சரித்திர சாதனைகளை, கின்னஸ் சாதனைகளாக ஏற்படுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் கின்னஸ் சாதனை படைத்தார்கள். மார்பக புற்றுநோய் சிகிச்சைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கின்னஸ் சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது.*

*வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் 234-க்கு 234-லும் வெற்றி பெற்று கின்னஸ் சாதனையைப் படைக்கவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சாதனையாக ஆர்.கே. நகர் தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் 88 விழுக்காடு வாக்குகள் பெற்று வெற்றிச் சாதனையைப் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குச் சொந்தமான நிலம் ஏதும் இல்லை. உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ அல்லது வருவாய்த் துறை*

மூலமாகவோ இடத்தைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்புகின்றபோது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டரங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**42—**

## அடிப்படை வசதிகள்

***48096—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தேனி மாவட்டம், ஹைவேவிஸ் பேரூராட்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தேவையான அடிப்படை வசதிகள் சுற்றுலாத் துறைமூலம் செய்யப்பட்டு வருகின்றன.*

*அதன் அடிப்படையில், தேனி மாவட்டம், ஹைவேவிஸ் எஸ்டேட், மேகமலை பசுமையான தேயிலைத் தோட்டங்களையும், ஏலக்காய் எஸ்டேட்டுகளையும் கொண்டுள்ள பகுதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுமா என்று கேட்டிருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருத்துருவை அனுப்பி வைக்கும்பட்சத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவதில், இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்குகிற அரசு *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாகும். *2* கோடி மக்களுக்கு விலையில்லா *20* கிலோ அரிசி, *1* கோடியே *67* இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா வேட்டி-சேலை, *1* கோடியே *60* இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் ஃபேன், *90* இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு *14* வகையான இலவசப் பொருட்கள். இப்படி வாரி, வாரி வழங்கி, அள்ளிக் கொடுக்கிற ஒரே அரசு. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தமிழ்நாட்டில் கொடைக்கானல், ஊட்டிக்கு இணையாக சுற்றுலாத் தலமாக விளங்குகிற இடம் ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதி. அந்த ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தற்போது புதிய, அழகான தார்ச்சாலை அமைக்க *81* கோடி ரூபாய் நிதியொதுக்கியுள்ளார்கள். அந்த வேலைகள் நடைபெற்று வருகின்ற வேளையில், அந்த ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து சிறப்புச் செய்தால் நலமாக இருக்குமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துரு பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின்

[2016 ஜனவரி 23

*ஆலோசனையைப் பெற்று ஹைவேவிஸ் எஸ்டேட் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**43—**

## ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம்

***37428—திரு. என்.வி. காமராஜ்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேதாரண்யத்தில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாண்டுக் காலம் கண்டிராத மழை வெள்ளத்தை தன்னுடைய கருணை மழையால் வென்று காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புனித அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டுக் காலம் தொடர வேண்டுமென்று மேற்கொண்டிருக்கின்ற பிரார்த்தனையை எடுத்து வைக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2016 ஜனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

**திரு. என்.வி. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*'தோன்றின் புகழோடு தோன்றுக; அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று'*

*என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாய், புகழோடு பிறந்து, புகழாலே நிறைந்து, புகழோடு திகழ்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*கன்றின் குரலும், கன்னித் தமிழும் சொல்லும் வார்த்தை 'அம்மா அம்மா'!*

*கருணை தேடி அலையும் உயிர்கள் உருகும் வார்த்தை 'அம்மா அம்மா'!*

*தமிழ்நாட்டு மக்களின் கனவை நிறைவேற்றித் தரவே இறைவன் உங்களைத் தந்தான் அம்மா. தமிழையும், தமிழினத்தையும் காப்பதற்காகவே உருவான இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உலகிற்கு உணர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் கூறும் நல்லுலகில் புகழ் மணக்க நீங்கள் வாழ்வீர்கள் அம்மா. உங்கள் தாய் அன்பில் பத்திரமாய் தமிழ்நாடு தான் வாழும் என, என்னை வாழ வைக்கும் அன்னையே உங்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

*எனது வேதாரண்யம் தொகுதிக்குட்பட்ட, வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகம் பழுதடைந்த, பழமையான கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, புதிய கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

[2016 ஜனவரி 23

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், 356 கோடி ரூபாய் வாரி வழங்கி, வருவாய்த் துறைக்குத் தேவையான 377 கட்டடங்களை உருவாக்கித் தந்து, வருவாய்த் துறைக்குப் புத்துயிர் அளித்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண்கள் 44 மற்றும் 45 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.*

*வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, அதெல்லாம் ஒன்றும் இல்லை. அன்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவில் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) எதற்கெடுத்தாலும் எழுந்து நிற்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, எதுவும் கிடையாது. (குறுக்கீடு) அதெல்லாம் அனுமதி எதுவும் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு)*



2016 ஜனவரி 23]

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு பதிலுரை. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.*

*மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.*

*மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, சொல்லுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. தருமபுரியில் புதிதாக சிப்காட் துவக்குவது குறித்தும்;*

*2. கிருஷ்ணகிரியில் அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*3. தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு தலா ரூ.50,000/- வழங்குவது குறித்தும்;*

*4. கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,000/- அளிப்பது குறித்தும்;*

*5. தமிழகத்தில் வாழும் அனைத்து பழங்குடி இன மக்களுக்கும் இலவச வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;*

*6. தமிழகத்தில் வாழும் மாற்றுத் திறனாளிகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி மாதம் ரூ.3,000/- வழங்குவது குறித்தும்;*

[திரு. ப. டில்லி பாபு] [2016 ஜனவரி 23

7. கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில், வரும் ஆண்டிலிருந்து தினக் கூலியாக ரூ.300/- உயர்த்தி வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

**திரு. கே. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அமைப்பது குறித்தும்;

2. திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பெருகவாழ்ந்தானை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

3. திருவாரூர் மாவட்டத்தில், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்குவது குறித்தும்;

4. திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் மற்றும் விக்கிரபாண்டியம் ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

5. திருத்துறைப்பூண்டி நகரிலுள்ள பழைய கட்டடத்தில் இயங்கி வரும் கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;



2016 ஜனவரி 23] [திரு. கே. உலகநாதன்]

6. திருத்துறைப்பூண்டி நகரிலுள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

7. திருத்துறைப்பூண்டி–மன்னார்குடி இணைக்கும் கோரையாற்றில் புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

8. அரிச்சந்திர நதியில் ஆண்டாங்கரை அருகில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

9. திருத்துறைப்பூண்டி நகரிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

10. திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

11. திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. திருவாரூர் மாவட்டத்தில், மத்திய கூட்டுறவு வங்கி தொடங்குவது குறித்தும்;

13. திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை மற்றும் கோட்டூரிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. திருவாரூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு நிவாரணம் ரூ.25,000/- வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2016 ஜனவரி 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, இருக்கையில் இல்லை.*

*மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. காவேரி படுகையில் அமைந்துள்ள தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் கடலூர் மாவட்டங்களை வேளாண்மைப் பாதுகாப்பு மண்டலங்களாக அறிவித்து,* O.N.G.C. *உட்பட எந்த நிறுவனமும் பூமிக்கடியில் எவ்வித ஆய்வும் நடத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*2. அரசமைப்புச் சட்டம், உறுப்பு 161-ன் அடிப்படையில் தமிழக சிறைச்சாலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்நாள் சிறைவாசிகளாக உள்ள பேரறிவாளன், அபு தாகிர் உட்பட அனைவருக்கும் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*3. இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் நகரிலுள்ள அரசினர் போக்குவரத்துப் பணிமனையை நகருக்கு வெளியில் மாற்றி, அந்த இடத்தில் நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*4. இராமநாதபுரம், கீழக்கரையில் அமைக்கப்பட்டுள்ள ஜெட்டிப் பாலத்தை மராமத்து செய்து சீர்படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*5. இராமநாதபுரம் தொகுதியில், கணினியில் பதிவு செய்ய விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*6. 10 ஆம் வகுப்புத் தேர்வில் சிறுபான்மை மொழிகளான உருது, அரபி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழிப் பாடம் கட்டாயமாக எழுத வேண்டும் என்ற விதியை ஐந்தாண்டுகளுக்குத் தளர்த்துவது குறித்தும்;*



2016 ஜனவரி 23] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

*7. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணப் பதிவுச் சட்டத்தில் சிறுபான்மை முஸ்லிம் சமூக திருமணங்கள் பதிவு குறித்து உரிய வகையில் விதிவிலக்கு அளிப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. காவேரி படுகையில் அமைந்துள்ள தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் கடலூர் மாவட்டங்களை வேளாண்மைப் பாதுகாப்பு மண்டலங்களாக அறிவித்து,* O.N.G..C. *உட்பட எந்த நிறுவனமும் பூமிக்கடியில் எவ்வித ஆய்வும் நடத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*2. அரசமைப்புச் சட்டம் உறுப்பு, 161-ன் அடிப்படையில் தமிழக சிறைச்சாலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்நாள் சிறைவாசிகளாக உள்ள பேரறிவாளன், அபு தாகிர் உட்பட அனைவருக்கும் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*3. தமிழகத்தில் 10 ஆம் வகுப்புத் தேர்வில் சிறுபான்மை மொழிகளான உருது, அரபி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழிப் பாடம் கட்டாயமாக எழுத வேண்டும் என்ற விதியை ஐந்தாண்டுகளுக்குத் தளர்த்துவது குறித்தும்;*

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2016 ஜனவரி 23

4. ஆம்பூர் தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

5. ஆம்பூர் தாலுகாவில் சார்நிலைக் கருவூலம் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

6. தென்பெண்ணை—பாலாறு இணைப்பு விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;

7. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணப் பதிவுச் சட்டத்தில் சிறுபான்மை முஸ்லிம் சமூக திருமணங்கள் பதிவு குறித்து உரிய வகையில் விதிவிலக்கு அளிப்பது குறித்தும்;

8. ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், நாய்க்கனேரி மலைக்கு சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகளுக்குக் கடன் இரத்து செய்வது குறித்தும்;

2. கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணை மற்றும் ஏ.வி.எம். சானலை தூர் வார நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலைகள் மற்றும் பேருந்துகளைச் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுவது குறித்தும்;



2016 ஜனவரி 23] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

4. இரப்பர் விலை மிகவும் குறைந்துள்ளதால் இரப்பர் விவசாயிகளுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

5. கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீன்பிடித் துறைமுகம், தேங்காய்ப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் தொடர்பான பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும்;

6. கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் வர்த்தகத் துறைமுகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தீண்டாமைக் கொடுமையை முற்றிலும் ஒழித்திட உறுதியான நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. லோக் ஆயுக்தா சட்டம் இயற்றுவது குறித்தும்;

3. தொழிற்சாலைகளிலும், அரசு நிறுவனங்களிலும், அங்கன்வாடி சத்துணவு அமைப்புகளிலும் குறைந்தபட்ச மாத ஊதியமாக ரூ.15,000/- நிர்ணயிப்பது குறித்தும்;

4. கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் வைத்துள்ள நிலுவையை உடனே வழங்கச் செய்ய உறுதியான நடவடிக்கை எடுப்பது குறித்தும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4,000/- வழங்கிட நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

5. அரசுப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை உயர்த்த கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்தும்;

6. நீர்வள ஆதாரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கவும், திடக் கழிவு மேலாண்மையை மேம்படுத்தி, கொடுங்கையூர், பெருங்குடி போன்ற பெரும் குப்பை மேடுகளை அகற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பிறகு நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும், உட்காருங்கள்.

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

மேதகு ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 20-1-2016 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்தவர்கள், பாராட்டியவர்கள், குறை கூறியவர்கள் என அனைவருக்கும் எனது நன்றியினை





முதற்கண் தெரிவித்துக் கொண்டு, எனது பதிலுரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ, அப்படித்தான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு நிம்மதி வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான், "பசி, பிணி, பகை இல்லாதிருப்பது நல்ல நாடு" என்றார் வான்புகழ் திருவள்ளுவர். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களின் அமுத மொழிக்கேற்பவும், வள்ளுவரின் வாய்மொழிக்கேற்பவும் கடந்த 56 மாதங்களாக மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அரசு, எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மக்கள் நிம்மதியுடன் வாழ வகைசெய்யும் விதமாக பல்வேறு திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருந்தாலும், சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் எங்கள்மீது கண்டனக் கணைகள் தொடர்ந்து தொடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன; குற்றங்கள் சுமத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. எங்கள்மீது சுமத்தப்படும் குற்றங்களுக்கு விளக்கம் அளித்தாலும், ஒரு சிலர், தொடர்ந்து உண்மைக்கு மாறாக தாங்கள் கூறியவற்றையே திரும்பத் திரும்பச் சொல்வதன்மூலம் மக்கள் அதனை நம்பிவிடுவார்கள் என்று மனப்பால் குடிக்கின்றனர். எது உண்மை, எது உண்மை அல்லாதது என்பதைப் பகுத்து உணரும் அறிவார்ந்தவர்கள்தான் தமிழக மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையிலே பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் கடந்த வடகிழக்குப் பருவ மழையின்போது ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிப் பேசினார்கள். கடந்த வடகிழக்குப் பருவ மழை காலதாமதமாக 28-10-2015 அன்று துவங்கியது. ஒரு சில நாட்களில் மிக அதிக அளவு கன மழை கொட்டித் தீர்த்ததன் காரணமாக, பல மாவட்டங்கள், குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாயின. பருவ மழை துவங்குவதற்கு முன்னரே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், நூறாண்டுகளில் இல்லாத அளவு பெரு மழை பொழிந்ததன்

காரணமாகப் பாதிப்புகள் அதிகமாக இருந்தன. இந்திய இராணுவம், கப்பற்படை, விமானப் படை, தேசிய பேரிடர் மீட்புக் குழு, மாநில பேரிடர் மீட்புக் குழு, காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் மற்றும் இதர துறையினர் என 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. உயிரிழந்தோரின் குடும்பங்கள், குடிசைகளை இழந்தோர், வெள்ளம் சூழ்ந்ததால் பாதிக்கப்பட்டோர், கால்நடைகளை இழந்தோர், பயிர் பாதிப்புக்குள்ளான விவசாயிகள், வல்லங்கள் போன்றவற்றை இழந்த மீனவர்கள் ஆகிய அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய்க் கரையோரங்களில் குடிசை வீடுகளில் வசித்து பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் விலையேதுமின்றி அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடுகள் வழங்கும் ஒரு பெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, இதுவரை, 2,313 குடும்பங்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான தொழில் முனைவோர், அதிலும் குறிப்பாக, சிறு, குறு தொழில் முனைவோர்க்கு, வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் வழங்கிய கடன் தவணையை ஒத்திவைத்தல், மறு கடன் உதவி போன்ற சலுகைகளைப் பெற எனது அரசு உதவி செய்து வருகிறது. இந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மிகச் சிறு வணிகர்கள், பெட்டிக் கடை நடத்துவோர் ஆகியோர் வாழ்வாதாரத்தை மீண்டும் பெறும் வகையில் 5,000 ரூபாய் வட்டி ஏதுமில்லாமல் கூட்டுறவு வங்கிமூலம் கடன் வழங்கும் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் சுமார் 2 இலட்சம் சிறு வணிகர்கள் பயன் பெறுவர். மேலும், 25 சதவிகித மூலதன மானியத்துடன் 5 இலட்சம் ரூபாய் வரையிலான கடன், தகுதியுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனது அரசின் இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக, மழை பாதிப்பிலிருந்து அனைவரும் மீண்டுவிடுவர் என நான் உறுதியாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏழை எளியவர்களுக்கான அரசு; இல்லாதோரை கைதூக்கி விடும் அரசு; குறை உள்ளவர்களை நிறைவாக்கும் அரசு; (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைக் காக்கும் அரசு. எனவேதான், வளர்ச்சி என்பதை வெறும் பொருளாதார வளர்ச்சியாக நான் பார்ப்பதில்லை. மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சி, அதாவது GSDP மாத்திரம் ஆரோக்கியமான வளர்ச்சியல்ல. நாட்டு முன்னேற்றத்திற்கு மொத்த உற்பத்தி வளர்ச்சி, பயன் அளிக்கலாம். ஆனால், வளர்ச்சி என்பது ஒவ்வொருவரையும் சென்றடைய வேண்டும். அடித்தட்டில் உள்ள மக்கள் பொருளாதார வளர்ச்சியின் பயனைப் பெற வேண்டுமென்றால் அவர்கள் கல்வியிலும், உடல் நலத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென்பது இன்றியமையாததாகும். கல்வி மற்றும் மக்களின் உடல் நலம் ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சி சமுதாய வளர்ச்சிக் குறியீட்டை நிர்ணயிக்கும். எங்கு சமுதாயக் குறியீடுகள் விரைந்து வளர்ச்சி அடைகின்றனவோ, அங்குதான் ஏற்றத்தாழ்வற்ற நிலை ஏற்படும். அப்போதுதான் 'எல்லாரும் எல்லாமும் பெற முடியும்'. "எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் நிலை" என்ற குறிக்கோளை அப்போதுதான் எய்த இயலும். எனவேதான், கல்வி வளர்ச்சிக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைவருக்கும் தரமான கல்வி வழங்கிட வேண்டுமெனில், பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும்; போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்; மாணவ, மாணவியரின் இடைநிற்றலைக் குறைத்திட வேண்டும்; மாணாக்கர்களின் கற்கும் திறன் உயர்த்தப்பட வேண்டும்; இவையெல்லாம் நிறைவேற்றிட வேண்டுமென்ற காரணத்தால்தான் கடந்த 5 ஆண்டுகளில் பள்ளிக் கல்வித் துறைக்கென 84,568 கோடி ரூபாய் எனது அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுக் காலத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 39,058 கோடி ரூபாய்தான். அதாவது, இந்த 5 ஆண்டுகளில் எனது ஆட்சியில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கியதைவிட 116 சதவிகிதம்

உயரளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவேதான், தொடக்கக் கல்வி, நடுநிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி என அனைத்து நிலைகளிலும் சேர்க்கை விகிதம் கணிசமாக உயர்ந்துள்ளது. இடைநிற்றல் விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது. இவற்றிற்குக் காரணம், இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த 56 மாதங்களில் 26.96 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்கு 4,723 கோடி ரூபாய் செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை இடைநிற்றல் இன்றி தொடர, சிறப்பு ஊக்கத் தொகை அளிக்கும் திட்டம் எனது அரசால் அறிமுகம் செய்யப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி ஊக்கத் தொகையாக அவர்களின் பெயரில் முதலீடு செய்யப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்திட்டத்தின்கீழ், 5 ஆண்டுகளில் 1,13,76,000 மாணவ, மாணவியர் 1,810 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாகப் பெற்று பயனடைந்துள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* 2010–2011 ஆம் ஆண்டு ஓர் இணை சீருடை வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது பள்ளி மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த 5 ஆண்டுகளில் இதற்கென 1,698 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

*முற்பகல் 11–25*

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. 2012–2013 ஆம் ஆண்டு முதல் விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அவை வழங்கப்பட்டு வருகின்றன. விலையில்லா புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், நில வரைபடப் புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதுபோலவே, ஓர் இணை காலணிகள் வழங்கும் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவையன்றி, விலையில்லா மிதிவண்டிகள், கட்டணமில்லா



பேருந்துப் பயணச் சலுகை, சத்தான மதிய உணவு ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கு அதிக செலவிலான தனியார் பள்ளிகளை நாடுவதற்கான முக்கியக் காரணம் ஆங்கிலவழிப் போதனை என்பதால், அரசுப் பள்ளிகளிலேயே ஆங்கிலவழிக் கல்வி வழங்கும்பொருட்டு, தேவைக்கேற்ப 12,092 ஆங்கிலவழிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* 2.64 இலட்சம் மாணாக்கர்கள் இதில் பயின்று வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் 221 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* தேவைக்கேற்ப பள்ளிகளை அமைப்பதோடு, பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்புகளை வழங்கிடவும் எனது அரசு முன்னுரிமை அளிக்கிறது. கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச் சுவர், மாற்றுத் திறனாளிகளுக்கென சாய்வு தளங்கள், ஆண், பெண் குழந்தைகளுக்கென தனித் தனியே கழிவறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 4,166 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

சிறந்த கல்வி வழங்கப்பட ஆசிரியர்கள் காலத்தே நியமிக்கப்பட வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் 72,843 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். *(மேசையைத் தட்டும் ஒலி)* 14,711 ஆசிரியரல்லாப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* பள்ளிக் கல்வியில் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் காரணமாகத்தான், தமிழ்நாடு பள்ளிக் கல்வியில் ஒரு சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை நான் முதலில் பெருமையுடன் பதிவு செய்ய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*2011 ஆம் ஆண்டு உயர் கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம், அதாவது* Gross Enrolment Ratio *தமிழ்நாட்டில் 18 சதவிகிதம் என்ற அளவில் இருந்தது. அப்போது இந்திய அளவில் இந்த சதவிகிதம் 15 என இருந்தது. தற்போது இந்திய அளவில் மொத்த மாணவர் சேர்க்கை 23.6 சதவிகிதம் என்று உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் இது 44.8 என்ற சதவிகிதத்தை அடைந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதாவது, இந்திய அளவில் கடந்த 5 ஆண்டுகளில் 8.6 சதவிகித அளவிற்கே உயர் கல்வி மாணவர் சேர்க்கை உயர்ந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் இது 26.8 சதவிகிதம் உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய மகத்தான வளர்ச்சிக்குக் காரணம் எனது தலைமையிலான அரசு நிறைவேற்றிய பல்வேறு திட்டங்கள்தான் என்பதை நான் இங்கே உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலும், தற்போதும் உயர் கல்வி தொடர்பான சில புள்ளிவிவரங்களைத் தெரிந்துகொண்டால், தற்போது நான் தெரிவித்த வியத்தகு சாதனை எப்படிச் சாத்தியமாயிற்று என்று புலப்படும்.*

*முற்பகல் 11-30*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 வரையிலான ஆண்டுகளில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது உயர் கல்விக்கு செலவிடப்பட்ட தொகை 6,142 கோடி ரூபாய். கடந்த 5 ஆண்டுகளில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் செலவிடப்பட்ட தொகை 14,609 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதை கவனத்தில் கொள்ள வேண்டும், குறித்துக்கொள்ள வேண்டும். 5 ஆண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒட்டுமொத்தமாக கல்விக்காக செலவிடப்பட்ட தொகை 6,142 கோடி ரூபாய். ஆனால், கடந்த 5 ஆண்டுகளில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் செலவிடப்பட்ட தொகை 14,609 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முந்தைய தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 10. தற்போது, எனது ஆட்சியில் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள கல்லூரிகள் 39.*





*(மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய தி.மு.க. ஆட்சியில் புதியதாகத் தொடங்கப்பட்ட பாடப் பிரிவுகள் 26. தற்போது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள பாடப் பிரிவுகள் 959. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த தி.மு.க. ஆட்சியில் கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை வெறும் 7 கோடி ரூபாய். தற்போது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 220 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் கணக்கிட்டுப் பார்த்தீர்களானால், தி.மு.க. ஆட்சியின்போது செலவிடப்பட்டது* single digit figure, *7 கோடி ரூபாய். ஆனால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் செலவிடப்பட்ட தொகை 220 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அன்றைய தி.மு.க. ஆட்சியில் 20,626 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 43,586. (மேசையைத் தட்டும் ஒலி)*

*அன்றைய தி.மு.க. ஆட்சியில் எந்தவொரு புதிய அரசு பொறியியல் கல்லூரியும் நிறுவப்படவில்லை. ஆனால், தற்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 4 புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய தி.மு.க. ஆட்சியில் 78,045 பொறியியல் பயிலும் முதல் தலைமுறை மாணாக்கர்களுக்கு மட்டுமே பயிற்சிக் கட்டண விலக்கு வழங்கப்பட்டது. தற்போது, எனது அரசால் பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 2,84,609. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதைய தி.மு.க. ஆட்சியில் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை 149 கோடி ரூபாய். தற்போது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் செலவிடப்பட்ட தொகை 2,268 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய தி.மு.க. ஆட்சியில் நிறுவப்பட்ட அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 8, தற்போது அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் நிறுவப்பட்டுள்ளவை 11. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய தி.மு.க. அரசால் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 568. தற்போது எனது அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 1,153. (மேசையைத் தட்டும் ஒலி)*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

*முற்பகல் 11-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வள மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிப்பதும், மக்களின் வாழ்வு வளம் பெறவும், கல்விக்கு இணையான பங்கு வகிப்பதும் மக்கள் நல்வாழ்வு ஆகும். எனவேதான், மக்கள் நல்வாழ்விற்கென பல்வேறு முன்னோடித் திட்டங்கள் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏழை எளியோரும் சிறந்த மருத்துவச் சிகிச்சை பெறும்வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் முடிய 2,759 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் 13.27 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். இதில் அரசு மருத்துவமனைகளில் மட்டும் 5.40 இலட்சம் நபர்களுக்கு, 1,003 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்யும் வகையிலும், கர்ப்ப காலத்தில் சத்தான உணவு உட்கொண்டு நிறைவான எடையுள்ள குழந்தையை ஈன்றெடுக்கும் வகையிலும், இரத்த சோகை மற்றும் பேறுகாலத்திற்குப் பின் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் வகையிலும், தடுப்பூசிகள் போடப்பட்டு குழந்தைகள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதை உறுதிசெய்யும் வகையிலும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 12 ஆயிரம் ரூபாய் மகப்பேறு நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 31 இலட்சத்து 19 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 2,910 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் மற்றும் அம்மா மகப்பேறு சஞ்சீவி ஆகியவையும் வழங்கப்படுகின்றன. பெண்களின் தனிப்பட்ட சுகாதாரம் பேணும் வகையில் ஆண்டுதோறும் 33 இலட்சம் கிராமப்புற வளர் இளம் பெண்களுக்கு விலையில்லா Sanitary napkin-கள் வழங்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 134 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, Scan வசதி, அறுவை சிகிச்சை வசதி போன்ற வசதிகளுடன் 131 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 15 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தவும், 7 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 42 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்–சேய் நல மையங்கள் 19.45 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. உலகத் தரம் வாய்ந்த மருத்துவக் கல்லூரிகள் அமைத்தல், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கென 1,398 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 968 கோடி ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் பல்வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*முற்பகல் 11-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலேயே முதன்முதலாக மாநிலத்தில் சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் 14,707 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்தியாவிலேயே அரசுத் துறையில் முதன்முதலாக சிசு மரண விகிதத்தைக் குறைப்பதற்காக அவசரகால சிசு பராமரிப்புச் சேவை எனது அரசால் துவக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சுட்டிக்காட்டிய சீர்மிகு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால்தான் நல்வாழ்வு குறியீடுகளில் நாம் உன்னத நிலைமையை அடைந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில், ஆயிரம் குழந்தைகள் பிறப்புகளுக்கு 24 என இருந்த குழந்தை இறப்பு விகிதம், தற்போது எனது ஆட்சியில் 21 ஆகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் ஆண்டில் 27 என இருந்த ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் 23 எனக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று 2010 ஆம் ஆண்டு தாய் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 79 என இருந்தது, தற்போது 67 ஆகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள், யாரையும் சார்ந்திராமல் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் கல்வி மற்றும் உடல் நலன் ஆகியவற்றிற்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

படித்த இளைஞர்களுக்கு தொழில் துவங்குவதற்கான பயிற்சிகளை அளித்து, அவர்கள் தொழில் துவங்க ஊக்கம் அளித்து வருகிறோம். படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெறும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் 1,28,058 இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவன்றி வேலைவாய்ப்புத் துறை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் பணி தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் நேரடித் தேர்வு ஆகியவற்றால் 3,03,111 நபர்கள் அரசு மற்றும் அரசுத் துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், அதாவது Employees' Provident Fund Organization-ல் உள்ள கணக்குப்படி கடந்த டிசம்பர் மாதம் முடிய பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,94,86,789. 31-3-2011 நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 86,56,792. எனவே, தற்போது E.P.F. பதிவுடன் உருவாக்கப்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் 1,08,29,997 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வி அளித்தல் மற்றும் உடல் நலன் பேணுதல் ஆகியவை நீண்டகால பயன்களை அளிக்க வல்லது. எனினும் ஏழையெளிய மக்களின் தற்போதைய அன்றாட வாழ்வாதாரத்திற்கு உதவிகள் செய்யப்பட வேண்டும். எனவேதான், எனது தலைமையிலான அரசு அத்தகைய பல உதவிகளைச் செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாயப் பெருமக்களின் வளமான வாழ்வுக்கும் இன்றியமையாததாக விளங்கும் வேளாண் துறைக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. சாகுபடிப் பரப்பை அதிகரித்தல், விவசாயத்தில் புதிய



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உத்திகளைக் கையாளுதல், தரமான இடுபொருட்களை வழங்கல், விளைபொருட்களைச் சேமித்து வைத்து நியாயமான விலையில் விற்பதற்காகக் கிடங்குகள் அமைத்தல், மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதார விலையைவிட அதிக விலை வழங்குதல் எனப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதன்மூலம் உணவு தானிய உற்பத்தியில் புதிய சாதனைகளை ஆண்டுதோறும் படைத்து வருவதோடு, விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய உற்பத்தி பெருக வேண்டுமெனில் வேளாண் துறைக்குக் கணிசமான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் விவசாயத் துறைக்கு உயர் அளவிலான நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–45

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் விவசாயத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 7,655 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் விவசாயத் துறைக்கென எனது அரசு ஒதுக்கியுள்ள தொகை 23,583 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் வற்றாத ஜீவ நதிகள் எதுவும் இல்லாததால் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர்க் குறைபாடு எப்போதும் தமிழகத்தில் இருக்கிறது. நுண்ணீர்ப் பாசனத்தை ஊக்குவிப்பது இதற்கு ஒரு தீர்வாக அமையும் என்பதால் நுண்ணீர்ப் பாசன அமைப்பை ஏற்படுத்தும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியமும் வழங்கப்படுகிறது. 1.66 இலட்சம் விவசாயிகளுக்கு சுமார் 800 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு 22 ஆயிரத்து 58 கோடியே 61 இலட்சம் ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது. வட்டி மானியமாக 589 கோடியே 58 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையை நீக்கி, உரிய நேரத்தில் பயிர் சாகுபடி மேற்கொள்ள வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1.69 இலட்சம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க 199 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் சாகுபடிப் பணிகளை எளிதில் மேற்கொள்ளும் வகையில் வேளாண் பொறியியல் துறைமூலம் விவசாய இயந்திரங்கள் குறைந்த

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

வாடகையில் வழங்கப்படுகின்றன. நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திடவும், போதிய நீர் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையிலும், மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு 74 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாய உற்பத்தியைப் பெருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010-2011 ஆம் ஆண்டில் 75.95 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்த உணவு தானிய உற்பத்தி, 2014-2015 ஆம் ஆண்டில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 127.96 இலட்சம் மெட்ரிக் டன் என உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, உணவு தானிய உற்பத்தியில் 68.48 சதவிகிதம் வளர்ச்சியை நாம் அடைந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 5 ஆண்டுகளில், 60,000 பேருக்கு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்படும் என என்னால் அறிவிக்கப்பட்டது. இதுவரை, 59,905 பேருக்கு 210 கோடி ரூபாய் செலவில் கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை, எளிய மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் 7 இலட்சம் ஏழை, எளியவருக்கு தலா 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் விலை ஏதும் இல்லாமல் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 897 கோடி ரூபாய் செலவில், 6,95,000 பயனாளிகளுக்கு 27,80,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 830 புதிய கால்நடை மருந்தகங்கள் மற்றும் 200 கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 155 நகரும் கால்நடை மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,615 புதிய கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு 422 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 1,248 புதிய கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 1,191 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் 78 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-50

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பால் வளத் துறையின் உட்கட்டமைப்புகளுக்காக 97.35 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்ட நிலையில், கடந்த 5 ஆண்டுகளில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 593.65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 5.35 இலட்சம் லிட்டர் பதப்படுத்தும் திறன் உயர்த்தப்பட்டுள்ளதுடன், மேலும், 9.60 இலட்சம் லிட்டர் அளவிற்கும் பதப்படுத்தும் திறனை உயர்த்துவதற்கான விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் திறனுள்ள பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை திருவண்ணாமலையில் அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது நாளொன்றுக்கு சராசரியாக 20.67 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் இருந்த நிலையில், தற்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இது சராசரியாக 29.41 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் நலனில் எனது தலைமையிலான அரசு தனி அக்கறை செலுத்தி வருகிறது. மீன்பிடித் தடைக் காலங்கள் மற்றும் மீன்பிடி குறைவான காலங்கள் ஆகியவற்றின்போது பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

பாரம்பரிய மீன்பிடித் தளங்களை இயந்திரமயமாக்கும்வகையில், நாட்டுப் படகுகளில் இயந்திரங்கள் வாங்கிப் பொருத்துவதற்கு 50 விழுக்காடு மானியம், டீசலுக்கு விற்பனை வரி அறவே விலக்கு, நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையிலான மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. மீனவர்கள் பிடித்து வரும் மீன்களின் தரத்தினைப் பாதுகாத்து, அவற்றின் மதிப்பினைக் கூட்டி, மீனவர் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி இறங்கு தளங்கள், மீன் பதனிடும் பூங்காக்கள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் ஆற்று முகத்துவாரங்களை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் 746 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில், தொலைதூரக் கடல் பகுதியில் மீன் பிடிக்க ஏதுவாக, புதிய சூரை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

மீன் படகு கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவான 60 இலட்சம் ரூபாயில் 50 விழுக்காடு, அதாவது, 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மீனவர் நலனுக்கும், மீன் உற்பத்திக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், முந்தைய தி.மு.க. ஆட்சியின்போது 28.41 இலட்சம் டன் என இருந்த மீன் உற்பத்தி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தற்போது 32.50 இலட்சம் டன் என உயர்ந்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது உட்கட்டமைப்பு வசதிகள்தான். எனவேதான், உட்கட்டமைப்பு வசதிகளை நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் ஏற்படுத்த எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நெடுஞ்சாலைத் துறைமூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் 163.94 கோடி ரூபாய் செலவில் 60.51 கி.மீ. நீளமுள்ள 12 புறவழிச் சாலைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. 19,190.52 கோடி ரூபாய் செலவில் 46,890.50 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1,793 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் 3,067.30 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 10,298 கோடி ரூபாய் செலவிலான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிப் பகுதியில் 3,989 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4,492 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 3,390 கி.மீ. பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள இதர நகராட்சிகளில் குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றிற்காக 9,619 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24,231 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று, பேரூராட்சிகளில் 3,625 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20,751 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 8,943 கோடியே 83 இலட்சம்



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, சென்னை பெருநகரப் பகுதியில் 4,325 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 56 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் 'தாய்' திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 2,930 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 750 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரகக் கட்டடங்கள் பழுதுபார்த்தல், சூரிய மின்சக்தி தெரு விளக்குகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள் போன்ற இதர பணிகள் 1,370 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளன. 8,785 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 46 ஆயிரத்து 535 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் மற்றும் முதலமைச்சரின் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டங்களின்கீழ் 6 இலட்சத்து 43 ஆயிரத்து 275 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* 98 ஆயிரத்து 362 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

*நண்பகல் 12-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு மே மாதம் எனது தலைமையிலான அரசு பதவியேற்றபோது, எனக்கு மிகப் பெரிய சவாலாக இருந்த பிரச்சினை மின்வெட்டுப் பிரச்சினை. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு தமிழகத்தை இருளில் மூழ்கடித்து, தமிழ்நாட்டை இருண்ட காலத்திற்குக் கொண்டு சென்றிருந்தது. அறிவிக்கப்பட்ட மற்றும் அறிவிக்கப்படாத பல மணி நேர மின்வெட்டு மற்றும் மின் தடையை தமிழக மக்கள் அப்போது எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்தனர். அதற்கு முக்கியக் காரணம் முந்தைய தி.மு.க. அரசு புதிய மின் நிறுவுதிறன் ஏற்படுத்த தவறியதே ஆகும். 2011 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்றபின் மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்தியதன் காரணமாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மின் திட்டங்கள், கூட்டு முயற்சி திட்டம், மத்திய மின் உற்பத்தித் திட்டங்களிலிருந்து கிடைக்கும் பங்கு என்ற வகையில் 4,455.5 மெகா வாட் மின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

நிறுவுதிறன் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவன்றி, நீண்டகால மின் தேவையை எதிர்கொள்ளும் வகையில், 3,330 மெகா வாட் மின்சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதில், 2,830 மெகா வாட் மின்சாரம் தற்போது கிடைத்து வருகிறது. மேலும், சூரிய ஒளி மின்சாரம் போன்ற இதர வகையில் கிடைக்கும் மின்சாரத்தையும் சேர்த்து 2011 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு, 7,485.5 மெகா வாட் கூடுதல் மின்சாரம் தற்போது பெறப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு மின்சாரம் கூடுதலாகப் பெறப்படுவதால்தான், 5-6-2015 முதல் மின்வெட்டு என்பது தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற நிலையை உருவாக்கியுள்ளோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அடுத்த 6 மாதங்களில் மேலும் 1,232 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகப் பெறப்படும். மேலும், 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1,496 மெகா வாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. 3,901 மெகா வாட் திறன் உள்ள சூரியசக்தி மின்சார உற்பத்தி நிலையங்கள் அமைக்க 157 சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்கள் பதிவு செய்துள்ளனர். எதிர்கால மின் தேவையையும் கருத்தில் கொண்டு, பல புதிய மின் திட்டங்களைச் செயல்படுத்தும் நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கென புதிய தொழில் கொள்கை, வாகன உற்பத்தியை ஊக்குவிக்க புதிய கொள்கை, வளர்ந்து வரும் உயிரியியல் கொள்கைக்கான புதிய கொள்கை மற்றும் மாநிலத்தின் நீண்டநாள் வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டம்–2023 எனப் பல புதிய கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் நிகர மதிப்புக் கூட்டலின்படியும், தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுடைய மொத்த வருவாய் மதிப்பிலும், மொத்த ஏற்றுமதியிலும் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் கடந்த செப்டம்பர் மாதம் வரை 62,522 கோடி ரூபாய் அளவில் அந்நிய நேரடி முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. 2000 முதல் 2011 வரை,



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அதாவது 11 ஆண்டுக் காலத்தில் பெறப்பட்ட, அந்நிய நேரடி முதலீட்டைவிட இது ஏறத்தாழ இரு மடங்கு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. 1991 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான 20 ஆண்டுக் காலத்தில் கையெழுத்திடப்பட்ட மொத்த புரிந்துணர்வு ஒப்பந்த முதலீடுகளைவிட இது அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொழில் நிறுவனங்களில் பல தமது தொழில்களை இங்கு அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு முன் போடப்பட்ட 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 29 நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களை நிறுவி உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியினை ஊக்குவிக்கும்பொருட்டு, எனது தலைமையிலான அரசு முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம் மற்றும் மதிப்புக் கூட்டு வரி மானியம் போன்ற பல சலுகைகளை வழங்கி வருகிறது. 20,220 நிறுவனங்களுக்கு 417 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–05

கடந்த 5 ஆண்டுகளில் 5,32,819 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோர் ஒப்புதல் பதிவறிக்கையைப் பெற்றுள்ளன. 2006 முதல் 2011 வரை தொழில் முனைவோர் ஒப்புதல் பதிவறிக்கைகள் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 1,78,160 தான். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 88,354 கோடி ரூபாய் முதலீட்டில் தொழில் துவங்கியுள்ளன. முந்தைய தி.மு.க. ஆட்சியில் 2006 முதல் 2011 வரை செய்யப்பட்ட முதலீடு 15,906 கோடி ரூபாய் மட்டுமே. அதாவது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இந்த 5 ஆண்டுகளில் 555 விழுக்காடு அளவிற்கு அதிக முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுகளில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 14 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதி நீர் பிரச்சினைகளில், எனது தலைமையிலான அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருவதன் காரணமாக, நமது உரிமைகள் நிலைநாட்டப்பட்டதுடன், நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரும் உறுதி செய்யப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையை விசாரித்துக் கொண்டிருந்த உச்ச நீதிமன்றம், இதுகுறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து, 2010 ஆம் ஆண்டு உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டின் சார்பில் அந்தக் குழுவில் யாரையும் நியமிக்க வேண்டாம் என முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு முடிவெடுத்தது. இதைக் கண்டித்து நான் அப்போது அறிக்கை வெளியிட்ட பின்புதான், தமிழ்நாட்டின் சார்பில் நீதியரசர் டாக்டர் ஏ.ஆர். லட்சுமணன் நியமிக்கப்பட்டார். எனது தலைமையிலான அரசு 2011 ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்றபின் உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழு முன்பும், உச்ச நீதிமன்றத்திலும், சரியான ஆணித்தரமான வாதங்களை எடுத்து வைத்ததன் அடிப்படையிலேதான் உச்ச நீதிமன்றத்தில் நமக்குச் சாதகமான தீர்ப்பு பெறப்பட்டது. எனவே, கடந்த இரண்டு வருடங்களில் முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரை தண்ணீர் தேக்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர் பிரச்சனையில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதியாணை 5-2-2007 அன்று பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும், தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு இதனை மத்திய அரசிதழில் வெளியிடவில்லை. எனது தலைமையிலான அரசு எடுத்த நடவடிக்கையினால்தான் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு பெறப்பட்டு, நடுவர் மன்றத்தின் இறுதியாணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க நான் பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்தி வருகிறேன். உச்ச நீதிமன்றத்திலும், அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இதிலும் விரைவில் நமக்கு வெற்றி நிச்சயம் என நான் உறுதியாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கைப் பொறுத்தவரை, தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது. சட்டம்–ஒழுங்கைப் பாதிக்கச் செய்யும் நிகழ்வுகளிலும், குற்றத் தடுப்பு, புலனாய்வு ஆகிய காவல் பணிகளில் காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால் தமிழகத்தில் பொது அமைதி பாதுகாக்கப்படுகிறது. பொது அமைதி என்பதும், குற்ற நிகழ்வுகள் என்பதும் வெவ்வேறானவை ஆகும். பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், குற்ற நிகழ்வுகளே இல்லை என்ற நிலைமையை எய்திட இயலாது. மக்கள் தொகை அதிகரிப்பு, வளர்ந்து வரும் பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், மாறிவரும் சமுதாயச் சூழ்நிலை மற்றும் நகரமயமாதல் ஆகியவற்றால் குற்ற நிகழ்வுகள் ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கும் என்பதுதான் பொதுவான நடைமுறை என்றாலும், எனது தலைமையின்கீழ், காவல் துறையினரின் சிறப்பான பணிகளின் காரணமாக தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன என்பதுதான் உண்மை ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) குற்ற விகிதம், அதாவது, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்ற அளவீட்டின்படி பார்த்தால், 2010 ஆம் ஆண்டு அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் இறுதி ஆண்டில் தாக்கலான இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களின் குற்ற விகிதம் 277.08 என இருந்தது. தற்போது இந்தக் குற்ற விகிதம் எனது ஆட்சியில் 242.85 எனக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 2010 ஆம் ஆண்டு 1,715 என இருந்த கொலைகளின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டு 1,642 எனக் குறைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலவே, ஆதாயக் கொலை வழக்குகள் 30.07 சதவிகிதமும், கொள்ளை வழக்குகள் 2.75 சதவிகிதமும், களவு வழக்குகள் 23.22 சதவிகிதமும், கொலை வழக்குகள் உள்ளிட்ட சொத்து சம்பந்தமான வழக்குகள் 13.57 சதவிகிதமும் குறைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, குற்றங்களின் எண்ணிக்கை என்று எடுத்துக் கொண்டாலும்கூட தற்போது எனது ஆட்சியில் அவை குறைந்துள்ளன என்பதை நான் உறுதியுடன் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பாதையில் நடைபோட வைக்கவும், தமிழர்களின் மொழி, இன, கலாச்சார உணர்வுகளை மீட்டெடுத்து எதற்கும் கை ஏந்தும் ஏழ்மை நிலையை மாற்றி, எதிர்கால தமிழ் இளைஞர்கள், இளம்பெண்கள் தலைநிமிர்ந்து சொந்தக் காலில் நிற்பதற்கான வழியை உருவாக்கிடவும், கல்வி, மருத்துவம், விவசாயம், நதி நீர், அடிப்படைக் கட்டமைப்பு, வீடு, மின்சாரம் மற்றும் தொழில் துறைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, தமிழகத்தை தலைநிமிரச் செய்வதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனப் பிரகடனம் செய்து, இவற்றை நிறைவேற்ற செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பற்றி 2011–ல் எங்களது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தோம். அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி மற்றும் குறைந்த விலையில் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வழங்கப்படுகின்றன.

3 இலட்சம் பேர்களுக்கு பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என்ற வாக்குறுதியில் 2,62,853 பேர்களுக்கு 5,159 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 37,147 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

12 இலட்சத்து 8 ஆயிரம் பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

60,000 பால் கறவை மாடுகள் விலையின்றி வழங்கப்படும் என அறிவித்ததில் 59,905 கறவை மாடுகள் 210 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அடித்தட்டு குடும்பங்களுக்கு 4 ஆடுகள் விலையின்றி வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கேற்ப 897 கோடி ரூபாய் செலவில் 6,95,000 குடும்பங்களுக்கு 27,80,000 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மீனவக் குடும்பங்களுக்கு மீன் தடைக் காலத்தில் உதவித் தொகை 2,000 ரூபாயாக வழங்கப்படும் என்பதற்கேற்ப இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. 7.78 இலட்சம் மீனவர்களுக்கு 155 கோடியே 56 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளன. மீன் குறைவு காலங்களில் 4,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு, 7.57 இலட்சம் மீனவர்களுக்கு 368 கோடியே 63 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கடல் மீனவர் குடும்பங்கள் மற்றும் கடல் மீனவ மகளிருக்கு 2,700 ரூபாய் வீதம் 246 கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தாய்மார்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1 கோடியே 63 இலட்சம் குடும்பங்களுக்கு 6,553 கோடி ரூபாய் செலவில் இவை வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 1 கோடியே 63 இலட்சம் குடும்பங்களுக்கு 6,553 கோடி ரூபாய் செலவில் இவை வழங்கப்பட்டுள்ளன.

பணிபுரியும் மகளிருக்கு 6 மாத மகப்பேறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

12,000 ரூபாய் வழங்கும் மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 31 இலட்சத்து 19 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 2,910 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

திருமண உதவித் தொகையாக 50,000 ரூபாய் வரை நிதி உதவியும், திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 7 இலட்சத்து 72 ஆயிரத்து 643 பெண்களுக்கு 2,537 கோடியே 74 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் 2,844 கிலோ தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முதியோர் உதவித் தொகை 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. 30 இலட்சத்து 51 ஆயிரத்து 454 பேர்களுக்கு இது வழங்கப்படுகிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி, 32 இலட்சத்து 67 ஆயிரத்து 311 மாணாக்கர்களுக்கு 5,612 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாணாக்கர்கள் தங்கும் விடுதிகளில் உணவுக் கட்டணம் கூடுதலாக வழங்கப்படும் என்ற அறிவிப்பின்படி, பள்ளி விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கு மாதமொன்றிற்கு உணவுக் கட்டணம் 450 ரூபாயிலிருந்து 755 ரூபாயாகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கு மாதமொன்றிற்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் 550 ரூபாயிலிருந்து 875 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் அனைத்து விலையில்லாத் திட்டங்களும் நீட்டிக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல் வாக்குறுதியின்படி, திருக்குறள் மற்றும் பாரதியார் கவிதைகள் சீன மற்றும் அரபு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மாதம் 70 ரூபாய் என்ற குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இணைப்பு வழங்கப்படுகிறது.

10 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு சாதிச் சான்றிதழ் பள்ளிகளிலேயே வழங்கப்படுகிறது.

உழவர் பாதுகாப்புத் திட்டம் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 37 இலட்சத்து 19 ஆயிரம் பேர் 3,018 கோடியே 90 இலட்சம் ரூபாய் அளவிற்கு பயன்பெற்றுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

கூடுதல் நவீன பேருந்துகள் இயக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. 1,480 புதிய வழித் தடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 6,559 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பள்ளி மாணவ, மாணவியருக்கு 1,057 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் 31 இலட்சத்து 71 ஆயிரத்து 764 மிதிவண்டிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

விவசாயம், கால்நடை, மீன் வளம், நெடுஞ்சாலைகள், கல்வி, சுகாதாரம், மின்சாரம், தொழில் துறை என ஒவ்வொரு துறையிலும் கொடுத்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பற்றி நான் ஏற்கெனவே எனது பதிலுரையில் தெரிவித்துள்ளேன். நாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், அதற்கு மேலும் தமிழக மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் மட்டுமல்லாமல், பிற நாடுகளும் செயல்படுத்த விழையும் அம்மா உணவகங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், அம்மா விதைகள், அம்மா மருந்தகங்கள், பண்ணைப் பசுமை காய்கறி விற்பனை நிலையங்கள் எனப் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மக்களை நாடி சேவை புரியும் அம்மா திட்டம், 24 மணி நேரம் செயல்படும் அம்மா சேவை மையம் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளோம்.

8,542 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 724 கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தினந்தோறும் 56,728 பேர் பயனடைந்து வருகின்றனர். ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு பழனி தண்டாயுதபாணி திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர் நலன் காத்த பெரியோர்களின் நினைவினைப் போற்றும்வகையில், பென்னி குயிக், கரிகால் சோழன், வேலு நாச்சியார், தியாகி சங்கரலிங்கனார், மார்ஷல் நேசமணி, தியாகி வாஞ்சிநாதன், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர், சுப்பிரமணிய சிவா, வீரபாண்டிய கட்டபொம்மன், சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

மணிமண்டபங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தீரன் சின்னமலை மற்றும் வீரத்தாய் குயிலி ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட பெண்களுக்கான சுகாதார வளாகங்கள், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் பராமரிப்பில்லாமல் விடப்பட்டிருந்தன. தற்போது அவை 170 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மேலும், ஆண்களுக்கான சுகாதார வளாகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முந்தைய தி.மு.க. ஆட்சியில் நஷ்டத்தில் இருந்த கோ-ஆப்டெக்ஸ் போன்ற அரசு நிறுவனங்கள் சீரமைக்கப்பட்டு இலாபத்தில் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு மக்கள் நலனில் எவ்வித அக்கறையும் கொள்ளாமல், தங்கள் சொந்த நலனைக் கருத்தில் கொண்டே செயல்பட்டனர். மக்கள் நலன் என்ற போர்வையில் குடும்ப நலனையே அவர்கள் வளர்த்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மிகச் சிறந்த உதாரணம் இலவச வண்ணத் தொலைக்காட்சித் திட்டம். ஆனால், எனது தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அரசைப் பொறுத்தவரை, எங்களது திட்டங்கள் அனைத்தும் தமிழக மக்கள் நலனுக்காகத்தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழர் வாழ்வும், தமிழர் வளமும் என்றென்றும் மங்காது புதுப் பொலிவுடன் திகழும்வண்ணம் நாங்கள் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு தமிழக மக்கள் ஒரு மாற்றம் வேண்டுமென உறுதியுடன் இருந்தார்கள். சட்டம்—ஒழுங்கு சீர் செய்யப்பட வேண்டும், இல்லாதோரின் நிலை உயர வேண்டும், இருண்ட தமிழகம் ஒளி பெற வேண்டும், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், ஏழை எளியோர் ஆகிய அனைவர் வாழ்விலும் வசந்தம் வீசிட வேண்டுமென்று இந்த மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு மாற்றம் ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்புகளை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழக மக்களின் வாழ்வில் ஏற்றம் பெறச் செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் எனது பதிலுரையில் நான் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன். எனவேதான், தொடரட்டும் இந்த அரசு என்று மக்கள் தற்போது நினைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



2016 ஜனவரி 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பிற்பகல் 12–25

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அடிக்கடி சொல்லி வருகிறேன். அதைப்போலவே 'மக்களால் எனது தலைமையிலான அரசு, மக்களுக்காகவே எனது தலைமையிலான அரசு' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களால் இந்த அரசு, மக்களுக்காகவே இந்த அரசு. சிலர் கேட்கலாம், குறிப்பில்லாமல் பேசமுடியாதா என்று! பேச முடியும். மணிக்கணக்கில் பேசமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுக் கூட்டங்களில் பேசுவதுபோல் முழங்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) செந்தமிழில் முழங்க முடியும். ஆனால் இத்தனை புள்ளிவிவரங்களை நினைவில் வைத்துக்கொண்டு சொல்லமுடியுமா? ஒவ்வொரு துறையை எடுத்துக்கொண்டாலும்-36 துறைகள் இருக்கின்றன அரசாங்கத்தில்-ஒவ்வொரு துறையை எடுத்துக்கொண்டாலும், நாங்கள் செய்திருக்கின்ற சாதனைகளைச் சொல்லவேண்டுமானால், ஒரு துறைக்கு ஒரு நாள் தேவை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாள் முழுவதும் தேவை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியானால் இந்த 5 ஆண்டுக் காலத்தில் நாங்கள் செய்துள்ள சாதனைகள் முழுவதையும் சொல்லி முடிக்கவேண்டுமென்றால் 36 நாட்கள் நான் பதிலுரையை இங்கே வழங்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) 36 நாட்கள் இந்த அவை கூடவேண்டும். 36 நாட்களும் சொல்லக்கூடிய அளவிற்கு அத்தனைச் சாதனைகளைப் புரிந்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றையெல்லாம் சுருக்கி கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரத்தில் சொல்லக்கூடிய அளவிற்குக் கொண்டு வருவது என்பது பகீரதப் பிரயத்தனம் (மேசையைத் தட்டும் ஒலி) எதைச் சொல்வது, எதை விடுவது என்று பார்த்துப் பார்த்து தயாரிக்கப்பட்ட பதிலுரை இது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இன்னும் நாங்கள் செய்துள்ள சாதனைகளைச் சொல்ல வேண்டுமென்றால் ஏராளமானவை உள்ளன. ஆனால், நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் எங்களுடைய செயல்பாடு, எங்களுடைய திட்டங்கள் எல்லாமே மக்களுக்காகத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரை, எந்தச் சுயநலமும் இல்லை; பொது நலம்தான், மக்கள் நலம்தான்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜனவரி 23

*(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் உண்மையான மக்கள் இயக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இயக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்த தலைவியைக் கொண்ட ஓர் இயக்கம். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* இந்த இயக்கம் இருக்கின்ற வரை, நான் இருக்கின்ற வரை, இந்த இயக்கம் மென்மேலும், மென்மேலும் தமிழர்கள் வாழ்வு வளம் பெறச் செயல்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தப் பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தியளித்திருக்கும் என நான் நம்புகிறேன். எனது இந்தப் பதிலுரையை ஏற்றுக்கொண்டு, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுத்த திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான ஓர் உரையைக் கொடுத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள்.

விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றவா என்று அறிய விரும்புகிறேன்.

**(திருத்தங்கள் வலியுறுத்தப் பெறவில்லை)**

மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.



2016 ஜனவரி 23] [பேரவைத் தலைவர்]

*“2016 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்”* என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்களால் 21–1–2016 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. *(ஆம்)*

மறுப்போர் ‘இல்லை’ என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்., தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–30*

## 4. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. *(ஆம்)*

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 23

*பின்னர், பேரவை பிற்பகல் 12-31 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*10. 2015 ஆம் ஆண்டு நிருவாக அலுவலர்கள் பணியமர்த்தம் செய்வதற்கான வரைக்கட்டுகள் அடங்கிய விதிகள் இயற்றியது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் 6–11–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 260–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]

*11.* (i) *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/2014) 30-4-2015 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்தும்* [*1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] மற்றும் (ii) *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (கிணறுகள் அமைக்கும் பணியினை முறைப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு முறைகள்) விதிகள் இயற்றியது குறித்தும்* [*1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின்*



2016 ஜனவரி 23]

*(தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு, 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2013) 10(3) பிரிவு மற்றும் 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/2013) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-1) துறையின் 30-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 72-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.*

*12. 1988 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-1) துறையின் 30-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 74-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

*13. 1987 ஆம் ஆண்டு சென்னை பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் பிரிவு 8(1)(b)-ல் குறிப்பிட்டுள்ளவாறு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள வருவாய் கிராமங்களுக்கு சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர்கள் தகுதி வாய்ந்த அதிகாரிகளாக அதிகாரம் வழங்கியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-1) துறையின் 30-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 73–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

*14. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*15. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*16. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*17. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*18. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

*19. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை.* [*1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவஅறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 35(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*3. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.*